திராவிட நாடு

9—12—62 | வார வெளியீடு | விலை 16 காசு

இனி எதற்குப் பஞ்சாயத்து...?

—ராஜா மணிவாசகன்—

மானம் பெரிதென எண்ணிடும் நாட்டில்
மறவர் களப்படை வாழ்ந்திடும் வீட்டில்
ஈனர் இழிதகைப் பிறவிகள் சீனர்
இன்று நுழைந்தனர் இதைச் சகியோம்.

கொள்கை வேற்றுமை மறந்து விட்டோம்
கொடியதோர் பகைவனை ஒழிப்ப தற்கு
எல்லையைக் காத்திட மக்கள் இன்று
எல்லாப் பொருளையும் தந்து நின்றார்.

வீணையை மீட்டிடும் வேல்விழி மங்கையர்
வீரர்க்குக் கம்பளி பின்னு கின்றார்
ஏணையை இழுத்திடும் தாய் கூட
எதிரியை ஒழிப்போம் என் கின்றாள்.

தானை நடத்திடும் தகுதித் தளபதி
தளையை நீக்கினான் மக்களை ஊக்கினான்
ஆணை பிறந்தது சேனை நடந்தது
அஞ்சி நடங்குது செஞ் சீனா!

விண்ணை இடித்திடும் இமய மலை
வீரர் பரம்பரை வென்ற சொத்து
மண்ணை விழுங்கிடும் சீன ருடன்
மறுமுறை நமக்கேன் பஞ்சா யத்து?........

புனிதம்....?!

—குழலோன்—

நான்:

ஐந்து வருடங்களுக்குப் பிறகு, இன்றுதான் சொந்த மண்ணை மிதித்தேன். புகைவண்டி நிலையத்தின் வெளியில், நான்பிறந்து வளர்ந்து அந்த மண்ணை மிதித்த உடன், என் உடலில் ஒரு சிலிர்ப்பு! உள்ளத்தில் ஒரு நிலைபுரியா எழுச்சி! ஏன் அந்த மாற்றம்? 'தனது' என்ற எண்ணத்தின், அடிச்சுவட்டில் எழுந்த பூரிப்பா? 'நம்நாடு, நம்ஊர்' என்கிற போது இந்த எழுச்சி இருக்கத்தான் செய்யும்போலும்!

'பூவனம்! ஆம், நான்பிறந்து, ஓடி ஆடிய சிற்றூர். உலகத்து மலரெல்லாம், ஒன்றாகி நின்றதுபோல் காட்சி தரும் வனம்தான் எங்கள் ஊர்.

ஐந்து வருடங்கள். அலைஓசை கேட்கும் தமிழ்நாட்டுத் தலைநகரம் என் புகலிடமாகியது. ஆனால் சிற்றலை எழுப்பி ஓடும் இந்த மணி ஆற்றுச் சலசலப்பு இசையின் ஓசையை உணரும் அளவுக்கு, சுவைத்த அளவுக்கு; அந்த ஓசையைச் சுவைக்க முடிந்ததா? எங்கு நோக்கினும், செயற்கை! சுயநலத்தின்கொடுமை! குடிக்கக் கூழில்லாமல், இருக்க இடமில்லாமல், நடைபாதையில், கொஞ்சும் குழவிகள், கோரக் குரலெழுப்பி அழ, மனமகிழ்ந்து வாழும் இல்வாழ்க்கை, வெறுப்பும் சலிப்புமாக மாறி எழ, வாழும் அந்தப் பரிதாபத்திற்குரிய உயிர்களைக்கண்டு, சலித்து, வெறுத்து, தவறு! பரிதாபப்பட்டு மனம் நொந்த நான்—

கருமைபடர்ந்த குன்றுகள் திரையிட்டுநிற்க, அவைகளின் மடியில் மணிஆறு, சிலுசிலுத்து நகர, அம்மலையின் பின்னணியை, நீலவானம் அழகாக்க, அந்த நீலத்தில், செம்பஞ்சுக் குழம்பை சிதறவிட்டாற்போல், மாலை ஞாயிறு, மதியைக் காண ஏங்கிநிற்க, காதலனைக் காணாக்கன்னி, மனம்நொந்து, முகமும் கண்ணும் சிவந்து நிற்பது போல் நின்ற காட்சியும், களைத்த பறவை இனங்கள், பாடிக்கொண்டே கூடுகள் நோக்கிச் செல்லும் இனிய இசைக்காட்சி, உலகத்து, இன்ப துன்பங்களையெல்லாம் நீக்கி இதயத்தை இலேசாக்கியது.

தேவையற்ற வாழ்க்கை, ஐந்து வருடங்களாக வாழ்ந்ததை எண்ணும்போது வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனால் நடந்ததை எண்ணி வருத்தப்படுவதைவிட முட்டாள்தனம் வேறு ஒன்றும் இருக்க முடியாது!

பணம் இருக்கிறது என்ற ஒரே காரணத்தால் பொறுப்பின்றித் திரிந்த என் கடந்தகால வாழ்க்கையை எண்ணும்போது வேதனையாகத்தான் இருக்கிறது. வாழ வேண்டும் என்ற ஆவல், இருக்கத்தான் செய்கிறது. அதற்காக, பொறுப்பின்றிப், பணத்தை நீராகச் செலவிட்டால்தான் வாழ்க்கையா?

பேராசிரியர் கூறியதுபோல் அந்த உடல் வாழ்க்கை, வாழ்க்கை நாவலில் ஒருசிறு அதத்தியாயம்தான். உள்ளத்தால் வாழும் வாழ்க்கைதான் பெரும்பங்கு! ஆகவே, உள்ளத்தைப் புனிதமாக்கி, தியாகத்தால் உயர்ந்து, மண்ணில் பெற்ற நலமெல்லாம், மற்றவருக்கும் ஈந்து வாழவேண்டும், நம்மைச் சூழ்ந்தவர்களுக்கெல்லாம், நம்மால் ஆன உதவி செய்யவேண்டும் என்று பலவாறு வழிமுறை, எல்லை வகுத்துக் கொண்டு வாழமுற்பட்டேன்.

ஆனால், பிறர் நலம் பேண எண்ணிய என்னை, சுயநலத்தின் உருவமாக ஆக்கிவிட்டாள் அவள்—குவளை மலர்கண்ணாள்.காதளவோடிய கரிய கண்ணின் இமைகள் படபடக்கும் போது, என் இதயத்தை யாரோ தட்டுவதுபோல் ஒரு வேதனை—இன்ப வேதனைதான்! கன்னங்கரிய கூந்தல், மணிஆற்று சிற்றலையாகப் படர்ந்து, நிற்க, அதை நளினமாகக் கோதித் தளர்முடி இட்டு, செவ்வரளிப்பூ ஒன்றை மட்டும், இலைகள் தழுவ ஒடித்து, ஒரு பக்கமாகச்சூடி, செந்நிறப்பொட்டொன்று, தன் ஒளி நுதலில் பதித்துவிட, வெள்ளை ஆடை அணிந்து, அன்ன நடை நடந்து அவள், அந்த ஆற்றங்கரை ஓரம் நடக்கவும், மாலைத்தென்றல் அவள் உடலில் தழுவி, சிலுசிலுப்பி, என்னை வந்து மோத, உலகமே எனக்காக ஒளிபெற்றது போன்ற ஒரு பிரமை...கனவு மயக்கம்!

யாரவள்? எங்கிருக்கிறாள்? யாருக்குத் தெரியும்? கனவுக் கன்னி அவள்......காவில் பூத்த நறுமலர்...புனிதம் என்ற சொல்லின் மென்மை அவள். இலேசான என் இதயம், இன்பத்தில் எண்ணத்தால், உலகத்தனை பாரமாக அழுத்தியது.

குருதிச் சிவப்பின், வெளிர் மஞ்சள் கலந்து உறவாடி வந்த மாலை வெயில் அவள் உடல்பட்டுத் தெறிக்கும்போது, சொல்லவல்ல வார்த்தைகளா? மெல்லவந்த நினைவலையா? ஏனோ, என் மனம், சிதறிச் சிதறிக் கூடுகிறது. முடிவு......? யாருக்குத் தெரியும்? எது தவறினும், மாலை தவறாது, அத்துடன் ஆற்றங் கரை வர நானும் தவறுவதில்லை. அவளும் தவறுவதில்லை. முதலில், ஏதோ பார்த்தாள் என்னை. மறுநாள், யார்? என்ற வினா! மற்றுமொருநாள் நீங்களா? என்ற குறிப்பு! பிறிதொரு நாள் எதிர்பார்த்தேன்! என்ற சுழிப்பு......இவ்வளவும் கண்ணில்! கண்ணின் கடைப் பார்வைதான் கிட்டிவிட்டதே! இனி என்ன? விவரம் தெரிய ஆண்டுகளா வேண்டும்? அரை விநாடி போதாதா?

அவள்:

அமைதி தவழும் அவர் முகம்..... அதில் ஒளி பொருந்திய கண்கள்! அந்த ஒளியில் ஓராயிரம் பொருள் கூறும் பாவம். அவர் யாரோ? நான் யாரோ? ஆனால், ஏன் என் மனம் அவர் உறவை, நாடுகிறது. அன்பைத் தேடுகிறது? இது புரிந்து விட்டால், இன்பத்திற்குப் பொருள் புரிந்து விடுமே! ஆனால், அவர் முதலில் பேசக் கூசினார். 'ஆண்பிள்ளை நீங்கள், உங்களுக்கேஇந்தத் துணிவில்லையே?!' என்றதற்குக் கூறிய பதிலில்தான் எத்தனை பெருந்தன்மை: 'புனிதம்!' (எப்படித்தான் என் பெயர்தெரிந்துகொண்டாரோ!') நான் ஆண்பிள்ளை. சிறிது வசதி படைத்தவனும்கூட. உன்னுடன் நான் பேசினால் உலகம் என்னை ஒன்றும் கூறாது. ஆனால் உன்னை...? சொல்லத்தகாத வார்த்தைகளால்; உன் புனிதமான பெண்மையையே கேவலமாக்கும் இந்த உலகம்! ஏன்? மனம் வளராத மக்கள் நிறைந்து விட்ட இந்தச் சமூகத்தில் இன்னமும் நன்மை தீமை புரிந்துகொள்ளும் மனவளம் உண்டாகவில்லை. உன் எதிர்காலமே, கல்பட்ட கண்ணாடியாகச் சிதறி விழும். அதில் எழும் அவல ஓசை......! அப்பா! நினைக்கவே நடுங்குகிறது உள்ளம்!' என்றார். அண்ணனும் தங்கையும் ஒன்றாகப் பேசிக்கொண்டுபோனாலே தவறாக எண்ணும் உலகம், அறிமுக

(4-ம் பக்கம் பார்க்க)

சமாதானமா? சாகசமா?

மலர் 21] ஆண்டு சந்தா ரூ. 8 (9—12—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 15

சமாதானம் என்ற பேச்சில் சாகசம்

★

போர் நிறுத்தம் என்ற போர்வைக்குள் பதுங்கும் புலி

★

இந்த வஞ்சக சீனரின் தந்திரப் போக்கால் நாம் ஏமாந்துவிடமாட்டோம்

★

படைபலத்தைப் பெருக்குவோம் பகையை முறியடிப்போம்

★

டிசம்பர் 1-ல் வாபஸ் என்றனர் வஞ்சக சீனர்

★

இன்னும் வாபசாகவில்லை! ஏன்?

★

எதிரி வாபசாகிறான்; நமக்கேன் போர் ஏற்பாடுகள்

என்று வாளா இருந்துவிடுவோம் நாம் என்று எண்ணினான்போலும்!!

★

வாபஸ் என்ற அறிவிப்புக்குப் பின்னர்தான்

நாம் வலிவுடன் இருக்கவேண்டும் என்ற எண்ணம் நமக்கு உண்டாக்கி ஊக்கம் அளித்தது

★

மாறுவேடம் அணிந்தும் இந்திய மொழிகளைப் பேசியும் நம்மை ஏமாளிகளாக்க எண்ணுகிறான்

★

ஏமாளிகள் நாம் அல்ல என்பதை ஏகாதிபத்திய வெறியனுக்கு உணர்த்தவேண்டாமா?

★

எனவே, படைபலமும் பணபலமும் பெருகட்டும்

★

மன உறுதியும் உடல் உரமும் பெற்றுப் பகைவனை விரட்டியடிப்போமாக!

வெற்றி நமதே.

2-ம் பக்கத் தொடர்ச்சி

மில்லாத ஆடவனுடன் பேசினுல்' ஏன் பழி சுமத்தாது.

மனித உள்ளத்தின் உண்மை யான, மாற்றுக்குறையாத அன்பு இது ஒன்றுதான். இதையும் உல கத்துக்காக விட்டுவிட்டால், பிறகு, நம் அன்பு மனதிற்கு மதிப்புத்தான் ஏது? ஆனுல் இந்த உலகம்? உதட் டளவில் உலகை ஆள நினைக்கும் மக்கள்......?

புனிதமான பெண்தான் நான்! ஆனுல், விலைமாதர் குலமாம் நான்! அதற்காக, மனம் விரும்பியவரை மணந்து, தூய வாழ்க்கை வாழக் கூடாதாம்! அப்படியானுல், நான் இந்த இழிந்த வாழ்க்கைதான் வாழ வேண்டுமா? இந்தச் சமுகம் அதைத் தானே விரும்புகிறது. பேசும்போது மட்டும், சமுகம் சீர்திருந்தவேண் டும், இம்மாதிரி, மூட பழக்கவழக்கங் கள் ஒழியவேண்டும் என்று கூறு பவர்கள், அந்தப் பழைய சம்பிரதாய மூட்டைகளைக் கட்டிவைத்து, புதிய உலகுக்கு, அடியெடுத்து வைத்தால் தானே! பேசுவதைப் பேசிவிட்டுச், செயலில் வரும்போது மட்டும் ஒதுங்கிக் கொள்ளுகிருர்கள்! சரி! அவர்கள்தான் துணிவில்லாதவர் கள் என்ருல்,இவரைப்போல் துணிந் தவர்களையாவது வாழவிடுகிருர் களா? அதுவுமில்லை. சே! மனிதாபி மானமே அற்றுவிட்டிருக்கிறது இந் நாளில். என் தாய் அன்று வாழ்ந்த வாழ்க்கை? அவளுக்கே இன்று நினைக்க அருவருப்பாக இருக்கிறது. அதற்காகவே என் வாழ்க்கையை ஒரு நிலையான தூய வாழ்க்கை யாக்கி மகிழ, எங்கள் பரம்பரையின் அடிச் சுவட்டை மாற்றி, ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்க விழை கிருள். ஆனுல், ஊர்ப் பெரியவர் கள், 'சம்பிரதாயம்' என்ற பெயரில், 'குலாச்சாரம்'என்ற முள்வேலியால், எங்களை மடக்கி ஆளப் பார்க்கிருர் கள்.

இம்மாதிரி கேவல வாழ்க்கையை ஒரு பெண் மேற்கொள்ளுவது, உல குக்கும், அதைப் படைத்தக் கட வுளுக்கும் பொறுக்கும் அவர்கள் கூற்றுப்படி! ஆனுல், அவள் அந்தக் குப்பை கூளங்களை அகற்றி, அன் பின் வழி நின்று, அறத்தின் அடிச் சுவட்டில், புனித வாழ்க்கை மேற் கொள்ள முற்பட்டால், ஊர் ஒத்துக் கொள்ளாதாம்! சம்பிரதாயம் இடம் தராதாம்! அறவோரும் (அவர்கள் என்ன இலக்கணம் வரையறுத்து வைத்திருக்கிருர்களோ?) ஆண்ட வனும் பொறுக்கமாட்டானும்.

நான்:

சலனமற்ற என் வாழ்க்கையில் ஓர் பெரிய பூகம்பம்! அன்று அவ ளைச் சந்தித்தேன். அன்பை ஆராதிக் கும் வழி பெற்றேன். அழகைச் சுவைக்கும் திறம் பெற்றேன். ஆனுல் இன்று.........? ஏன் இந்தத் திறம் பெற்றேன்? என்று வருந்து கிறேன். நான் துணிந்து முன் வந் தாலும், அவள் தாய் துணிய மறுக் கிருள். ஊரைப் பகைத்து வாழ முடியாது. துணை இன்றி வாழும் நான், ஊரைப் பகைத்துக் கொண் டால், ஊருக்கு ஒளி வேண்டி, உறை யும் குடிசையை கொளுத்தியது போல் ஆகும்! சலனமற்ற உங்கள் வாழ்விலும், எரிமலை வெடிக்கும்! என்கிருள். ஊர் பெரியதனக்காரர், அழைத்து, என்னை, 'தம்பி! உன் எண்ணம் ஈடேற இன்னும் சிறிது காலம் போகவேண்டும். மீறித் துணிந்தால், ஒதுக்கி வைக்கப்படு வாய் சமுகத்திலிருந்து' என்ருர். அவரிடம் பேசுவது, கல்லில் நீர் சுரக்குமென்று காத்திருந்ததுபோல் ஆகும்! என்று பேசாமல் வந்துவிட் டேன். அன்று மாலை, ஆற்றங்கரை யில், அவளைச் சந்தித்தேன்.

'புனிதம்! வாழ்க்கையின் வெற்றி, மனதின் நல்லெண்ணம், துணிவு பெறும்போதுதான் கிடைக்கிறது: நாளையே நாம் பட்டினம் சென்று பதிவுத் திருமணம் செய்துகொள்ளு வோம்! வாழ்க்கையைக் கூட்டிக் கழித்துக் கொண்டே செல்லுவோம். முடிவு.........அது உலகம் முடித் துக் கொள்ளட்டும். ஊரின், மூடப் பழக்க வழக்கங்களால் பிரிந்து, உள்ளத்து உணர்வுகளால் அலைக் கழிக்கப்பட்டு, அல்லல்படுவதை விட, உள்ளத்து நல்லுணர்வு களுக்கு, மனசாட்சிக்கு மதிப்பு வைத்து, ஒன்ருக வாழ்ந்து, இலட் சியக் கனவை ஈடேற்றிக் கொள்ளு வோம்' என்றேன்.

கண்ணில் நீர், தாமரை மொட் டின்மேல் பனித்துளியென, மின்ன ஏறெடுத்து நோக்கினுள். அந்த நோக்கு, 'அப்படியாவது வாழ வேண்டுமா?' என்றது.

'ஏன் புனிதம்! நீ.........'

'அன்புக்குத் தடை விதித்து, உல கம் நம்மைப் பழி தீர்த்துக்கொள்ள விழையும்போது, நம் போன்ற இரு வர் தம் உயிரைப் பலியிட்டு, அந்த வழக்கத்தின் பயங்கரத்தை உல குக்கு எடுத்துக் காட்டினுல் என்ன?

'சே! வாழ வகையிருக்கும்போது, சாக வழி சொல்லுகிருயே பைத் தியக்காரிபோல்'!

'வாழும் வழி......எனக்கும் தெரி யும். அப்படி வாழவேண்டுமானுல், பட்டினத்துக்கு ஓடிச் சென்று தான் வாழவேண்டும் என்பதல்ல. இங் கேயே வாழலாம்! ஆனுல் உலகம் 'அன்பு' என்ற சொல்லை உணர, நெஞ்சில் 'அன்பு' தியாகம் என்ற அழகிய நீர்ச்சுனைகள் சுரந்து நிற்க, அதைத் தூர்த்துவிட்டு, வேண்டாத சம்பிரதாயங்கள் என்ற குப்பை கூளங்களைக் கொட்டி நாற்றமடிக் கச் செய்யும் முட்டாள்களைப் புனிதப் படுத்த, நம் இறப்பு ஒரு சாதனமாக பயன்படட்டுமே என்றேன்!'

சரி புனிதம்! உன் விருப்பப்படியே செய்வோம்! ஆனுல், ஒரு வேண்டு கோள்! ஒரு நாள், ஊரறிய மாலை சூடி மணமக்களாக நின்று, நம் வெற்றியின் நன்னுளைக் கொண்டாடி விட்டு, மறுநாள் மனம் விரும்பும் முடிவை ஏற்றுக்கொள்ளுவோம். இந்தஉலகம்அன்ருவது, 'அன்புக்கு, வேலியில்லை. அது பகலவனைப் போன்று, எல்லோருக்கும் ஒன்ருக ஒளி வீசுகிறது. மாளிகைக்கு குளிர்ச்சியையும், மண் குடிசைக்கு செந்தழலையும் அளிப்பதில்லை என்று பறை சாற்றுவோம்.

அன்று அவர்களின் இலட்சிய வாழ்க்கையின் கடைசி இரவு! மணக்கோலத்துடன் மங்கை அவ ளுடன் தன் இலட்சியத்தின் வெற் றியைக் கணக்கிட்டுக்கொண்டிருந் தான் அவன். அவளோ......அன் பனின் அரவணைப்பில் உயிரைப் பறி கொடுத்து, துவண்ட அல்லியாகத் தலை சாய்ந்திருந்தாள்.

ஒன்ருேடு ஒன்று பிணைந்த அந்த உடல்கள் மட்டும்தான் அங்கிருந் தன. உயிர் இல்லை. இருவரும் இறந்துவிட்டார்கள். இல்லை. இறக் கும் நிலையை உண்டாக்கிவிட்டது, பாழும் சமுதாயக் கோட்பாடுகளும், சம்பிரதாயங்களும்.

சமுதாயச் சழக்கர்களும், சம்பிர தாயக் கொடுமைகளும் இருக்கும் வரை இந்த இழி நிலை மாருது போலும்!!

★

"ஆக்கிரமிப்புக்கு அடிபணியோம்!"

—ச. கனகராசன்—

இந்தியா—சீனா இடையே எல்லைத் தகராறு ஏற்பட்டதிலிருந்து, போனமாதத்தில் சீனா பெரும் படையெடுப்பு நடத்தியது வரை நடந்த சம்பவங்கள் பற்றிச் சீன சர்க்கார் தனது யுத்த நிறுத்தத் திட்டத்தில் கூறியுள்ளவையனைத்தும் பச்சை புளுகு ஆகும். இந்த எல்லைத் தகராறை இந்தியா வேண்டுமென்றே தீர்க்காமல் விட்டுவைத்துள்ளது என்று சீனா கூறுவது முற்றிலும் பொய்யாகும்.

இந்தியா—சீனா இடையே உள்ள எல்லையானது நீண்ட காலமாக இரு நாடுகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டு எல்லைபற்றி தகராறு இல்லாமல் இருந்துவந்தது. 1957ம் வருடத்தில் சீன சர்க்கார் படைகள் இந்தியப் பகுதிக்குள் நுழைந்து ஆக்ரமிப்புச் செய்தன. இதன் மூலம் சீனாதான் எல்லைப்பிரச்னையை ஏற்படுத்தியது.

கடந்த 5 வருடங்களில் சீனப் படைகள் லடாக் பகுதியில் மேலும் மேலும் இந்தியப் பகுதிக்குள் ஆக்ரமிப்பு நடத்தி நீண்டகாலமாக இரு நாடுகளுக்கும் இருந்துவந்த எல்லையைத் தாங்களாகவே மாற்றி அமைத்து வந்துள்ளனர்.

1957—58ம் வருடத்தில் சீனப் படைகள் லடாக்கின் ஓரப்பகுதியான அக்சாய்சின் பகுதியில் நுழைந்தன. அங்கு அவர்கள் ரோடு போட்டனர். 1958 செப்டம்பரில் இப்பகுதிக்குச் சென்ற இந்திய ரோந்து காவல் வீரர்களைக் கைது செய்தனர்.

1959ம் வருட ஆரம்பத்தில் சீனப் படைகள் மேலும் மேற்கு நோக்கி முன்னேறின. சாங்சென்மோ ஆற்றுப்பக்கம் உள்ள கொங்கா கணவாய் வரை சீனர்கள் ஆக்ரமித்தனர்.

1959ம் வருடம் அக்டோபர் மாதத்தில் இப்பகுதிக்குச் சென்ற இந்திய ரோந்து காவல் படையினரில் 9 பேரைச் சீனர்கள் சுட்டுக் கொன்றனர். மீதிப்பேரைச் சிறைபிடித்தனர்.

சீனாவின் இந்த ஆக்ரமிப்புச் சம்பந்தமாக இந்தியா–சீனா பிரதமர்களுக்கு இடையே கடிதப் போக்குவரத்து நடந்தது. 1959ம் வருட செப்டம்பர் 8ந் தேதி சீனப் பிரதமர் எழுதியக் கடிதத்தில் 50 ஆயிரம் சதுரமைல் பரப்புக்கொண்ட இந்தியப் பகுதி தங்களுக்கே சொந்தம் என்று உரிமை கொண்டாடினார். எல்லைத் தகராறைச் சமரசமாகத் தீர்த்துக்கொள்ள விரும்புவதாகச் சொல்லிக்கொண்டே சீனப்படைகள் திருட்டுத்தனமாக இந்தியப் பகுதிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக ஆக்ரமித்துவந்தன.

1960ம் வருடத்தில் இந்தியா–சீனா பிரதமர்கள் சந்தித்துப் பேசி இருநாட்டு அதிகாரிகளும் இதுபற்றிப் பேச்சு நடத்தவேண்டும் என்று முடிவு செய்தனர். அதே சமயத்தில் சீனப்படைகள் லடாக் பகுதியில் பாங்கோங் ஏரிப் பக்கத்தில் சுரியா என்ற இடத்தில் நுழைந்தனர். அதே வருடம் ஜூன் மாதத்தில் இருநாட்டு அதிகாரிகளும் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்த சமயத்தில், சீனர்கள் இப்பகுதியில் மேலும் ஆக்ரமித்தனர். 1960ம் வருடம் அக்டோபர் மாதத்தில் சாங் சென்மோ பள்ளத்தாக்கில் உள்ள வெந்நீர் ஊற்றுக்களின் அருகே சீனப்படைகள் காணப்பட்டன.

1961ம் வருட மத்தியில் சீனப் படைகள் 1958ல் இருந்த இடத்திலிருந்து தென்மேற்கே 70 மைல் தூரம் வரை வந்திருந்தனர். அப்போது அவர்கள் லடாக்கில் சிப்சாங் பள்ளத்தாக்கின் மேல்புறத்திலும் நியாக்சு, தம்புகுரு ஆகிய இடங்களிலும் காவல் நிலையங்களை அமைத்தனர். தங்களது இராணுவ வேலைகளுக்காக ரோடுகளைப் போட்டனர். 1962ல் சும்டோ என்ற இடத்தில் இராணுவ நிலையத்தை அமைத்து குவாராகுவாஷ் பள்ளத்தாக்கில் ரோடு அமைத்தனர். 1962ல் ஜூலையிலிருந்து செப்டம்பருக்குள்ளாகப் புதிதாக 32 இராணுவ காவல் நிலையங்களை அமைத்தனர்.

சீனா இப்போது வெளியிட்டுள்ள யுத்த நிறுத்தத் திட்டப்படி 1959-ம் வருடம் நவம்பவர் 7-ந்தேதி சீனர்கள் இருந்த இடத்திலிருந்து அவர்கள் வாபஸ் ஆவதாக வைத்துக் கொண்டாலும் கூட அவர்கள் 6-ஆயிரம் சதுரமையில் பரப்பிலிருந்துதான் வெளியேறுவார்கள். (அப்படியும் ஆயிரக்கணக்கான சதுரமைல் பரப்புக்கொண்ட இந்தியப் பகுதி சீனர் வசம்தான் இருக்கும்.)

1962 செப்டம்பர் 8-ந்தேதியன்று சீனர்கள் நேபாபகுதியிலும் இந்திய எல்லைக்குள் நுழைய ஆரம்பித்தனர். இந்த நேபா பகுதியில் இந்தியா சீனா இடையே அதுவரை பெரும் அளவில் எல்லைத் தகராறு இல்லாமல் இருந்தது. எனினும் 1959-ம் வருட ஆகஸ்ட் மாதத்திலும் 1992 ஏப்ரல் மாதத்திலும் நேபா

பகுதியில் லாஞ்சு என்ற இடத்திலும் சீனப் படைகள் நுழைந்திருந்தன. கடந்த செப்டம்பர் 8-ந்தேதியன்று சீனப்படைகள் தாக்காமலே உச்சிப் பகுதிக்குள் நுழைந்தனர்.

போனமாதம் 20-ந்தேதியன்று சீனப்படைகள் லடாக், நேபாஆகிய இரு பகுதிகளிலும் பெரும் படையுடன் தாக்குதல் நடத்தி யுத்தம் ஆரம்பித்தனர். இந்த யுத்தத்தில் லடாக்கில் இந்திய காவல் நிலையங்களைத் தாக்கி அவற்றைச் சீனர்கள் பிடித்துக்கொண்டனர். நேபா பகுதியில் பெரும்பகுதியைக் கைப்பற்றினர். ஆரம்பத்திலிருந்தே சட்ட விரோதமாக இந்தியப் பகுதிக்குள் ஊடுருவிய சீனர்கள் கடைசியில் வெட்கங்கெட்ட முறையில் யுத்தத்தையும் ஆரம்பித்தனர்.

இவ்வாறு சீனர்களின் ஐந்தாண்டு ஆக்ரமிப்பு வரலாற்றை இந்திய அரசாங்க வெளிநாட்டிலாகா அதிகாரி அவர்கள் தன்னுடைய அறிக்கையில் தெளிவாகக் கூறியுள்ளார்.

இதிலிருந்து நாம் அறிவது, ஐந்தாண்டு காலமாக கொஞ்சம் கொஞ்சமாக இந்திய மண்ணில் ஆக்கிரமிப்புச்செய்து கடைசியில் யுத்தத்தையே ஆரம்பித்தனர் என்பதாகும்.

இந்தியா, சுதந்திரம் பெற்ற இப் பதினைந்து ஆண்டு காலமாக சமாதானம்—சமரசம் என்றே பேசி வந்தது — இப்போதும் அதனையே கடைப்பிடிக்கிறது — இனியும் கடைப்பிடிக்கும். அத்தகைய நாடான இந்தியாவுக்கு எந்த நாட்டின்மீதும் ஆக்ரமிப்புச் செய்யவோ அல்லது அடிமைப்படுத்தவோ நினைக்கவில்லை— நினைக்கப்போவதுமில்லை.

சீனா ஆரம்பத்தில் இந்தியாவின் சமாதானக் கொள்கைக்கு ஆதரவு கொடுப்பதுபோல் நடித்து நயவஞ்சகமாக இந்திய மண்ணில் ஆக்ரமிப்பு செய்து சண்டைக்கு வந்துள்ளது கண்டு வேதனைப்படவேண்டிய நிலையில் உள்ளது. அவர்கள் பகையை சாதாரணமாக முதலில் கருதினோம், அடுத்து இவர்கள் எவ்வளவுதான் தன்னுடையது என்று சொல்கிறார்கள் என்று பொறுத்திருந்தும், அவர்கள் சும்மா மிரட்டிப் பார்க்கிறார்கள் என்றும் நினைத்து, காலத்தில் நடவடிக்கை எடுக்காத நிலை ஏற்பட்டது.

பிறகு 1959ல் சாங்சென்மோ ஆற்றின் பக்கம் உள்ள கொங்கா கணவாய் வரை சீனர்கள் ஆக்ரமித்து 9 பேரைச் சுட்டும் மீதிப்பேரைக் கைது செய்த சமயமும்,

1959ம் ஆண்டு செப்டம்பர் 8ந் தேதி சீனப் பிரதமர் 50 ஆயிரம் சதுரமைல் பரப்பளவு கொண்ட பகுதி தன்னுடையது என்று சொன்ன போதும்,

ரோடு போட்ட சமயத்திலும், காவல் நிலையங்களை ஏற்படுத்திய சமயத்திலும், அதற்குப் பிறகும் இந்திய எல்லையில் சீனப் படைகள் புகுந்தபோதும், இந்திய சர்க்காரின் நல்லெண்ணத்தின் காரணமாக, இந்தியர்களைச் சாதாரணமாக வென்றுவிடமுடியும் என்று தப்புக் கணக்குப் போட்டுச் சீனப் படைகள் நம் மண்ணின் பெரும் பகுதியை ஆக்கிரமிப்பு நடத்த பெரும் படைகளைத் தயாராக வைத்திருந்து வஞ்சகத் தன்மையால் திடீர் என்று யுத்தமாக ஆரம்பித்தனர்.

“இளைதாக முள்மரம் கொல்க களையுநர் காழ்த்த இடத்து”

எப்படி முள்மரத்தை இளையதாக இருக்கும்போதே வெட்டாமல் விட்டுவிட்டு அது முற்றிய பிறகு அந்த முள் நமக்கு தொந்தரவு கொடுக்கிறதே, அதை வெட்டவேண்டும் என்று அதனை வெட்டும்போது அதில் உள்ள முள் நம்மைக் குத்திப் புண்படுத்துவதுபோல நம்முடைய பகைவர்களை — அவர்கள் வலுவில்லாத நேரத்தில் வென்றுவிடாமல் இருந்துவிட்டால் பிறகு அவர்கள் வலிவுபெற்று நம்மையே அழிப்பர் என்பது இக்குறளின் உட்பொருளாகும்.

‘விளையும் பயிர் முளையிலே’ என்பார்கள், விவசாயிகள். முளைக்கும் போதே இப்பயிர் விளையும், விளையாது என்பது தெரிந்துவிடும். அதுபோல பகை ஏற்படுகிறது எனும் போதே அப்பகை எப்படி ஆகும் என்பது தெரியும். பகை முற்றிச் சண்டையில் முடியும் என்று தெரியும்போதே எப்படி, முள்மரத்தை முதலிலேயே அழித்துவிடுவதுபோல முளையிலேயே கிள்ளிவிடுதல் என்பதைப்போல—வலுவான சண்டையாக மாறுமுன் அதனைக் களைய வேண்டும் என்பதை அறிகிறோம்.

எனவே, நாம் அதற்கான முன்னேற்பாடுகளுடன், பெரும் படைகளையும் நவீனப் போர்க் கருவிகளையும் கொண்டு எதிரிகளை விரட்டத் தயாராகஇருக்கவேண்டும். அதற்குத் தக்கபடி அமெரிக்கா தன்னுடைய பூரண ஒத்துழைப்பையும் போர்க் கருவிகளையும் தந்து பேருதவி புரிந்து வருகிறது. இதுபோல் பிரிட்டனும் மற்ற உலகத்திலுள்ள முக்கிய நாடுகளெல்லாம் உதவி புரிவதால், நம் படை, பலம் பெற்று வருவதால், நாம் எளிதில் சீனரை வெல்லமுடியும். எத்தனை ஆண்டானாலும், எவ்வளவு உயிர்ச்சேதம் பொருட் சேதம் ஏற்பட்டாலும், நாம் சீன ஆக்ரமிப்புக்கு அடிபணியாமல் சீனரை வெல்வது மட்டும் உறுதி!

★

பொங்கல் மலர்

இவ்வாண்டுப் பொங்கல் மலர்
மிகச் சிறந்த முறையில்
கருத்தும் வனப்பும் மிக்கதாய்
வெளியிடும்
ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

வெற்றியும் தோல்வியும்

— துரை —

உலகிலுள்ள நாடுகளில் இந்தியா, எகிப்து, பாபிலோன், கிரீஸ், சீனா முதலிய நாடுகள் மிகப்பழமையான நாடுகளாகும். வரலாற்று நூலாசிரியர்கள், எகிப்தும் பாபிலோனும் இவற்றுள் மிக மிகப் பழமையானவை என்கின்றனர். கிரீஸ் குடியாட்சித் தத்துவத்தின் பிறப்பிடமாகும்; மேற்கு நாகரிகத்தின் இன்பத் தொட்டிலாகும். உலகப் புகழ் பெற்ற அறிவுநூல் புலவன் சாக்ரடீஸ். தத்துவ ஞானி பிளேட்டோ, அரசியல் ஆசான் அரிஸ்டாட்டில், விஞ்ஞானி ஆர்க்மிடிஸ், வரலாற்றுத் தந்தை ஹெரடோட்டஸ் போன்ற பேரறிஞர்களையெல்லாம் ஞாலத்திற்குத் தந்து வான்புகழ் பெற்ற நாடு கிரீஸ் நாடேயாகும். இன்றைய பால்கன் தீபகற்பமே அன்றைய கிரீசாகும்.

ஒரு காலத்தில் கிரீஸ் நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய மாசிடோனியாவை, மன்னன் ஒருவன் ஆட்சிசெய்து வந்தான். அம் மன்னன் பெயர் பிலிப். அரசன் பிலிப் ஒரு பெரிய படை வீரன். அந்த 'சோல்ஜ'ருக்கு ஒரு மகன். அம் மகனே மாவீரன் அலெக்சாண்டர். குழந்தை அலெக்சாண்டரை ஒரு நல்ல அரசனாக்க—அஞ்சாமையும் துணிச்சலும் ஆண்மையும் உள்ள போர் வீரனாக்கப் பிலிப் விரும்பினான்.

அலெக்சாண்டரை, ஆழ்ந்து படித்தறிந்த—புலமைத் திறமுள்ள ஆசிரியர்களிடம் பிலிப் அனுப்பினான். அப்பொழுது அவனுக்கு வயது ஆறு. அலெக்சாண்டர் கற்பிப்பவர்களின் பாதுகாப்பில் விடப்பட்டான். ஆசிரியர்கள், குழந்தை அலெக்சாண்டருக்கு, வாசிக்க — எழுத — சொற்பொழிவு நிகழ்த்தச் சொல்லிக் கொடுத்தனர். ஆசிரியர்கள் மிகவும் கண்டிப்பாக இருந்தனர். அவர்கள் காலந் தவறாமையை — தாமதமில்லாத சரியான நேரத்தை அலெக்சாண்டருக்குக் கற்றுக்கொடுத்தனர். அவனை மூக்குப்பிடிக்கச் சாப்பிட அனுமதிக்கவில்லை. ஒவ்வொரு நாளும் குதிரைச் சவாரியும், விளையாட்டும் உண்டு. குளிர் காலத்தில் மெல்லிய ஆடைகளைக் கொடுத்து, அலெக்சாண்டரை குளிரின் கடித்தலுக்குப் பழக்கினர். கோடையில் 'சூடான பகலவனி'ல் அவன் வேகமாக ஓடவைக்கப்பட்டான். பாவம், குழந்தை அலெக்சாண்டர்!

சில வருடங்களுக்குப் பிறகு, அலெக்சாண்டர் ஒரு புதிய ஆசிரியரைப் பெற்றான். அவரே, அரசியல் ஆசான் என்று போற்றிப் புகழப்படும் அரிஸ்டாட்டில். அவர் அலெக்சாண்டரை, அறிவுள்ள—பகுத்தறியக்கூடிய ஒரு நல்ல அரசனாக்குவதற்குப் பயிற்சியளித்தார்.

ஒரு நாள், அரசன் பிலிப்பிற்கு முன்னால், ஒரு நேர்த்தியான—அழகான குதிரை கொண்டுவரப்பட்டது. அதனுடைய பெயர் பிக்பால். கருப்பு நிறம். முன் நெற்றியில் ஒரு வெள்ளை நட்சத்திரம். ஒவ்வொருவரும் அக்குதிரையை விரும்புவர். ஆனால் பார்வைக்கு அது முரட்டுத்தன்மையுடையதாய்க் காட்சியளித்தது. எவனொருவன் அதனருகில் சென்று அதனுடைய முதுகில் தாவ முயற்சிக்கிறானோ, அவனுக்கு அக்குதிரை தவறாமல் உதை கொடுத்தது. 'அது ஒரு மிக நல்ல குதிரை. ஆனால் நான் அதை எடுத்துக்கொள்ளவில்லை. அது மிகவும் பண்படாததாக-வெறியுள்ளதாக இருக்கிறது.' பிலிப் அரசன் இவ்வாறு அக்குதிரையைப் பார்த்துக்கொண்டுகூறினான்.

பிலிப் மன்னன் இப்படி அக்குதிரையை விமர்சித்தபோது, இளைஞன் அலெக்சாண்டர் அவனுடைய தந்தையுடன் இருந்தான். குதிரையின் பார்வையையும் நிறத்தையும் அவன் விரும்பினான். அவன் தகப்பனாரிடம், 'நான் அந்தக் குதிரையைப் பெறலாமா? தயவுசெய்து தடுக்காமல் எனக்கு இடங்கொடுங்கள்' என்று வேண்டினான்.

அலெக்சாண்டர் கடிவாளத்தை எடுத்தான். குதிரையின் வெறித்தனத்துக்கான காரணத்தை, உடனே அவன் கண்டுபிடித்துவிட்டான். அக்குதிரை அதனுடைய நிழலைப் பார்த்தே மிரண்டுகொண்டிருந்தது. ஆகையால் அலெக்சாண்டர் குதிரையின் முகத்தை கதிரவனுக்குத் திருப்பினான். நிழல் அதற்குப் பின்னால் விழுந்தது. இப்பொழுது அக்குதிரை அமைதியாகிவிட்டது. அலெக்சாண்டர் மெதுவான வார்த்தைகளைக் குதிரையிடம் பேசினான். பிறகு அவன் தரையிலிருந்து அதன் முதுகிற்குத் தாவினான்; கடிவாளத்தை இழுத்துப் பிடித்தான். குதிரை ஓட்டமெடுத்தது. அலெக்சாண்டர் சாட்டையை உபயோகிக்கவில்லை. அரசனும் அவனுடைய மனிதர்களும் திகைப்பால் வாயடைத்துப்போன ஊமை நிலையில், அவர்களுடைய இடங்களில் நின்றனர். கடைசியாக அலெக்சாண்டர் அவர்களை நோக்கித் திரும்பினான். அவன் குதிரையிலிருந்து குதித்து, அவனுடைய தகப்பனாருக்கு வணக்கம் செலுத்தினான். பிலிப், மகனுடைய பெருமையில் இலயித்தான்.

அலெக்சாண்டர் அரிஸ்டாட்டிலின் மாணவன் அல்லவா?

ஆண்டுகள் மடிந்தன. அலெக்சாண்டர் நேர்த்தியான — வாலிப மனிதனாக வளர்ந்துவிட்டான். பிலிப் இறந்த பொழுது, அலெக்சாண்டர் மாசிடோனியாவிற்கு அரசனாக வந்தான்.

மாசிடோனியா அலெக்சாண்டருக்கு ஒரு மிகச் சிறிய அரசாக இருந்தது. கடலைக் கடந்து புதிய நிலங்களை வீரத்தால் பிடிக்கவேண்டுமென்று அலெக்சாண்டர் விரும்பினான். நாளுக்கு நாள் அபாயத்திற்கும் கஷ்டத்திற்கும் நேராக அலெக்சாண்டர் போகலானான். ஆனாலும், அவன் ஒருதைரியமுள்ள சிப்பாய். நல்லதளபதி. அவனுடைய மனிதர்கள் அவனிடம் உண்மையாக நடந்தனர். எந்த அபாயகரமான இடத்திலும் போரில், அலெக்சாண்டர் முதல்வனாக வந்தான்.

ஒரு சமயம் அலெக்சாண்டரும் அவன் ஆட்களும் தங்கிய இடத்தில், குடிக்கத் தண்ணீர் கிடைக்கவில்லை. ஒரு சிப்பாய் தூரத்தில் சென்று, ஒரு சிறுய கிண்ணத்தில் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வந்தான். ஆனால், அலெக்சாண்டர் சிப்பாய் கொடுத்த தண்ணீரைக் குடிக்க மறுத்துவிட்டான். 'என்னுடைய வீரர்களும் மிகவும் தாகமுள்ளவர்களாக இருக்கிறார்கள்' என்றான் அலெக்சாண்டர். அவன் மற்றவர்களுக்காகக் கவலைப்படாமல் இருப்பதை விரும்பவில்லை.

அலெக்சாண்டர் எந்தவிதமான கஷ்டத்திலும், தன்னுடைய வீரத்தைக் காட்டி வெற்றி பெற்ருன்.

அலெக்சாண்டரின்படை ஆசியா மைனரை நோக்கி நடந்தது. அவன் ஈஜிப்டை அடைந்தான். அங்கே ஒரு புதிய நகரத்தை அவன் உண்டாக்கினுன். அலெக்சாண்டிரியா என்று அதை அவன் கூப்பிட்டான். ஈஜிப்டின் மிகப்பெரிய நகரகங்ளில் அது ஒன்று. அலெக்சாண்டிரியா கல்வியின் முக்கிய இடமாகும். உலகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மக்கள், அலெக்சாண்டியாவிற்குக் கல்வி கற்கச் செல்கின்றனர்.

அலெக்சாண்டர் பிறகு பர்ஷியன்களோடு சண்டைபோட, ஈஜிப்டை விட்டுக் கிளம்பினுன். ஒரு பெரிய அரசனை அவர்கள் பெற்றிருந்தனர். அவன் பெயர் டேரியஸ். கிரேக்கர்களுக்கும் பர்ஷியன்களுக்கும் அங்கே ஒரு காட்டுமிராண்டித்தனமான — உக்கிரமமான சண்டை நடந்தது. அலெக்சாண்டரின் படை வீரர்கள் மிகவும் தைரியமாகச் சண்டையிட்டுப், பர்ஷியன்களை பின்னேக்கி விரட்டியடித்தனர். அலெக்சாண்டரும் அவனுடைய மனிதர்களும் பர்ஷியன் பாசறையில் நுழைந்தனர். மன்னன் டேரியஸ், அவனுடைய அருமை மனைவியையும் அன்புத் தாயாரையும் விட்டுவிட்டு ஓடியிருப்பதை, அங்கே அவர்கள் கண்டனர். அலெக்சாண்டர் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும், அவர்களைத் தன்னுடைய சொந்தக் கூடாரத்திற்கு அழைத்து வந்தான். அலெக்சாண்டர் அவர்களிடம் அன்பும் இரக்கமும் காட்டி, நன்கு மதித்துக் கௌரவத்தோடு டேரியஸின் மனைவியையும் தாயாரையும் — நடத்தினுன். டேரியஸ் பிறகு இறக்கவும், அலெக்சாண்டர் பர்ஷியாவிற்கும் அரசன் ஆகிவிட்டான்.

ஆசைகள் மனிதனைக் கெட்டவனுக்கி விடுகிறது.

அலெக்சாண்டர் மேலும், அதிக நாடுகளைப் பிடிக்க விரும்பினுன். ஆனுல் அவனுடைய படைகள் அவர்களுடைய சொந்த நாட்டிற்குத் திரும்ப விரும்பினர். படை வீரர்கள் தங்களுடைய பிரியமுள்ள மனைவிகளையும் அன்புக் குழந்தைகளையும் பார்க்கப் பெரும் விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். ஆனுல் அலெக்சாண்டர் அவர்களை நாடு திரும்ப அனுமதிக்கவில்லை. படை வீரர்களைக் கிழக்குத் திசையாக இந்தியச் சமநிலத்தை நோக்கி நடக்கும்படி, அவன் கட்டளையிட்டான். 'நான் இந்தியாவையும் வீரத்தால் பிடிக்கவேண்டும்! என்று அலெக்சாண்டர் சொன்னுன். அலெக்சாண்டர் சிந்துநதிக் கரையை அடைந்தான். அங்கே அவன் ஒரு பெரிய மன்னன் போரஸ் என்பவனுடன் போரிட்டு, அவ்வரசனைத் தோற்கடித்தான்.

அலெக்சாண்டரின் படை வீரர்கள் இந்த நேரத்தில் மிகவும் சோர்வடைந்து விட்டனர். அவர்கள் பதினெரு வருடங்களாக அலெக்சாண்டரின் கட்டளைக்கு வணங்கி, சண்டை போட்டு வருகிருர்கள் அல்லவா? அவர்கள் மறுபடியும் வீட்டையும் குடும்பத்தையும் நினைத்துக் கொண்டனர். அலெக்சாண்டரிடம் அவ்வீரர்கள், மாசிடோனியாவிற்கு வழிகாட்டி நடத்திச் செல்லும்படி பிச்சை கேட்டனர். அலெக்சாண்டர் வேறு வழியின்றி வீரர்களின் வேண்டுகோளுக்குப் பணிந்து, அவனும் அவன் ஆட்களும் பாபிலோன் வழியாகத் திரும்பலாயினர். அலெக்சாண்டர் அங்கே நோயில் விழுந்தான். அவனுடைய நாட்டிற்கு வெகு தூரத்திலேயே, அவன் பரிதாபமாக இறந்துபோனுன்.

அலெக்சாண்டர் இறந்தபொழுது, அவனுக்கு வயது முப்பத்து மூன்றுதான். பொன்போன்ற சரித்திரத்தில், மிகப் பெரிய படை வீரர்களில் ஒருவனுக, அதற்குள் அவன் தன் பெயரைக் கவர்ச்சிகரமாகப் பொறித்துவிட்டான்.

O

இந்தியத் துணைக் கண்டத்தின் வடக்கு—வட கிழக்கு எல்லைகளில், சீனர்கள் திறந்த வீட்டில் — நாய் நுழைவதைப்போல் அக்ரமமாக நுழைந்து, 'நாங்களே மகாவீரர்கள்!' என்று கூச்சலிடுகின்றனர். மாவீரர்கள் கதையெல்லாம் இறுதியில் மண்ணிற்குள் புதையுண்டதை அவர்கள் மறந்துவிட்டு, பீகிங்கில் ஒப்பாரி வைக்கின்றனர். 'பாம்புப் பிரியர்'களிடம் சந்தர்ப்பவசமாக நமது வீரர்கள் பிடிபட்டுள்ளனர். அலெக்சாண்டர்கூட டேரியஸ் மன்னன் பாசறையில் கைது செய்த, அவன் மனைவியையும் தாயாரையும் கௌரவமாகவே அன்புடன் நடத்தி இருக்கிருன். ஒரு உண்மையான படை வீரன் அலெக்சாண்டரைப் போல்தான் இருப்பான். சீனுவின் தலைமை, நமது தூய்மையான யுத்த வீரர்களிடம் காட்டும் அன்ப, எப்படிப்பட்டதாக இருக்கும்? இறந்த காலமும் நிகழ் காலமும் சீனர்களை வடிகட்டிய அயோக்கியர்கள் என்கிறது. வேஷம் போடும் அந்தக் காட்டுமிராண்டிக் கம்யூனிஸ்டு அரசியல்வாதிகளைக் குறித்து, நாம் எந்த முடிவுக்கும் வர முடியாதுதான். சீனர்களால் இந்தியா ஒன்றும் அழிந்துவிடப் போவதில்லை.

சீனப் பிரதமர் 'சூ' நமது வாலாங், தாவாங், ஸீலாகுன்று, பாம்டிலா நகர் முதலியவற்றை எதிர்பாராவிதமாகப் பிடித்துவிட்டதில், பெருமகிழ்வு அனுபவித்துக்கொண்டிருக்கக் கூடும். உலகம், சீனர்களின் அற்ப செயலுக்காகச், சீனக் கம்யூனிஸ்டுகளைக் காரித் துப்பிக்கொண்டிருப்பது, சீன மூர்க்கர்களைத் தவிர மற்ற எல்லாருக்கும் புரிந்திருக்கிறது. அலெக்சாண்டர் கூடத்தான் டேரியஸ் அரசனை புறமுதுகிட்டு ஓடச் செய்தான். போரஸ் அரசனை வீழ்த்தினுன். பர்சியாவிற்கு அரசனுக முடிசூட்டிக்கொண்டான். அப்பேற்பட்டவனுக்கு கடைசியாக நேர்ந்த கதி என்ன? சாதாரண படை வீரர்களுக்குப் பணிந்தான். தன் நாட்டு முகத்தில்கூட விழிக்கவில்லை. நடு வழியிலேயே அநாதையாகச் செத்துப்போனுன். மாவீரர்களை அலட்சியமாக வென்ற அலெக்சாண்டரை, கேவலம் ஒரு நோய் மிக அலட்சியமாகவே மென்று துப்பிவிடவில்லையா? அவன் வாரிக்கொண்டு போனது என்ன? அதே போல், சீனக் கம்யூனிஸ்டுகள் இறுதியாக நம் இந்திய மண்ணிலிருந்து, வாரிக்கொண்டு போகப் போவது என்ன? இந்திய மலைப் பகுதிகளிலுள்ள நரிகளும் பிறவிலங்கினங்களும் சீனக் கம்யூனிஸ்டுகளின் பிணங்களை பிடுங்கித் தின்னப் போவதுதான் மிச்சம்.

இந்திய மண்ணை மிதித்த அலெக்சான்டர் தமது நாட்டிற்கு உயிரோடா திரும்பினுன்?

அலெக்சாண்டருக்காவது சரித்திரத்தில் வீரன் என்றஒரு பெயருண்டு. இந்தச் சீனப் பிடாரிகளுக்கு, சரித்திரத்தில் கிடைக்கவிருக்கும் பெயரெல்லாம், துரோகிகள் — அயோக்கியர்கள் — பொய்யர்கள் என்பதுதானே. இந்திய வீரர்களிடம், கம்யூனிஸ்டு சீனர்கள் மானபங்கப்படப் போவதைப் பார்த்து மகிழ, உலகமானது பேராவலுடன் காத்துக் கொண்டிருக்கிறது.

"தாயின் குரல்"

—[பண். நெடுமாறன்]—

"ஆபீசிலிருந்து வரும்போது, கம்பளிச் சட்டையும், ஸ்கார்ப்பும் வாங்கி வா தம்பி! மறந்து விடாதே..."

அன்னையின் குரல், வாசலில் இறங்குகையில் உள்ளிருந்து வந்தது.

வழி நெடுக வரும்போதுகூட அம்மாவின் குரல் செவிகளிலே எதிரொலித்தவண்ணமிருந்தது. தாயின் அன்பிற்கு ஈடானது இவ்வுலகில் ஏது? வயதான காலத்தில்கூட அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டுத் தனது பணிகளில் சளைக்காமல் ஈடுபடுவதை நினைத்துக்கொண்டேன்.

இத்தனை செய்தும்கூடத் தனக்காக, அதுவேண்டும், இது வேண்டுமென்று கேட்காமல் எனக்காக அல்லவா கம்பளிச்சட்டை வாங்கி வரச்சொல்கிருர்! அந்தத் தாய்மையின் தன்னலமற்ற தன்மையை வியந்தவண்ணம் பேருந்தி நிலையம் நோக்கி விரைந்தேன்.

நிலயத்தில் வழக்கமாக சந்திக்கும் நண்பர்களைக் காணுதபோது தான், தாமதமாக வந்துவிட்டோம் என்று எனக்குத் தோன்றிற்று.

"ஐயா! இன்னைக்கு எல்லா வண்டிகளும் பூட்டுதுங்களே"

மரத்தடியில் கடைவிரித்துவிட்ட இளநீர்க் கடைக்காரி, காய்களைச் சீவியவண்ணம் சொன்னுள். கைதேர்ந்த நாணக்காரியின் செங்காந்தள் விரல்களுக்குக்கூட இத்தனை பயிற்சி உண்டோ?

"ஆமாம் நேரமாகிவிட்டது......" என்று கூறியவண்ணம், கையிலே கொண்டுவந்த காண்டேகரின் 'கருகிய மொட்டு' புத்தகத்தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தேன். அடிக்கொருதடவை கண்கள்வண்டி வருகிறதா என்று நோக்கியபடியிருந்தன.

இளநீர்க்கடைக்காரிக்குச் சற்றுத் தொலைவில் ஒரு பெண் உட்கார்ந்து மூங்கில்களைப் பிளந்தவண்ணமிருந்தாள். அவள் எதிரே, பின்னிய கூடைகள் முறங்கள் அடுக்கப் பெற்றிருந்தன.

இளநீர்க்காரி வந்த வியாபாரத்தைக் கவனித்துக்கொண்டே பேசலானுள்:

"ஏம் புள்ளே! இன்னைக்குக்கூட உம் புருஷன் வூட்டுக்கு வல்லியா?"

மூங்கிலைச் சீவியவண்ணமிருந்த பெண்.

"நாசமாப் போனுன்...... எங்கு போய்த் தொலைஞ்சிதோ பீடை...... வூட்டெவுட்டுப் போய் மூனு நாளுக்கு மேலாச்சி...எங்க போய்க் குடிச்சிட்டுத் தாணுக்காரன்கிட்டே மாட்டிக்கிட்டுதோ யாருக்குத் தெரியும்?" என்ருள். அந்த பெண்ணின் குரலிலே வாழ்வில் ஏற்பட்ட துயரினுல் உண்டான வெறுப்பு இழையோடிற்று.

மது, கடையிலிருந்துதான் விலக்க முடிந்ததே தவிர, அதை எப்படியும் குடிக்கும் மனிதர்களிடமிருந்து விலக்க முடிந்ததா?

அந்த பெண் மேலும் தொடர்ந்தாள். "ஊரைச் சுத்திகிட்டு, குடிச்சி அலையறவர்களுக்குப் பெண்டாட்டி, புள்ளே கவனமா வரப் போவுது"...என்னமோ என் தலையெழுத்து"

என்று பழியைத் தலையெழுத்து மீது சுமத்திவிட்டுக் காரியத்திலிறங்கினுள். மடியிலிருந்த குழந்தை தாயின் அமுத சுரபியினின்றும் தன் பசியை ஆற்றியவண்ணமிருந்தது; இளநீர் விற்கும் பெண்ணும் தனது வியாபாரத்தைக் கவனிக்கலானுள்.

சற்று நேரத்திற்குப் பிறகு அலுத்தபடி வந்து நின்றது அரசினர் வண்டி. தப்பினேம் இன்று என்று நினைத்துக்கொண்டே பேருந்தியில் ஏறினேன்.

மறுநாள்:—

அலுவலகத்திற்குப் புறப்பட்டுப் பேருந்தி நிலயத்திற்கு, சற்று முன்னதாகவே வந்து சேர்ந்தேன். முன் தினம் அனுபவித்ததை மறந்துவிடவில்லையே!

கைவண்டியில் வந்த இளநீர்க் காய்களை அடுக்கியவாறிருந்தாள் அந்த இளம் நங்கை. தூரத்தில் தன் வழக்கமான இடத்தில் உட்கார்ந்து கூடையொன்றினைப் பின்னிக்கொண்டிருந்தாள் மற்றவள். அவள்முகம் சற்றுப் பருத்திருந்தது. கண்கள் சிவந்திருந்தன அழுது கிடந்ததின் அடையாளம் அப்படியே முத்திரையிட்டிருந்தது. மடியில் குழந்தையைக் காணவில்லை.

"வீட்டிலே விட்டுவிட்டு வந்துவிட்டாள் போலும்" என்று நினைத்தபடியிருந்த என்னை,

வரப்பெற்ருேம்

சென்னை
மின்னொளிப் பதிப்பகத்தாரால்
வெளியிடப் பெற்ற
1963
"திராவிடர் நாட்காட்டி"

வரப்பெற்ருேம். அன்ருடம் ஒவ்வொரு பொன்மொழியைப் படித்து இன்புறும் ஒரு நல்ல செயலை இந்த நாட்காட்டியின் மூலம் அளித்திருப்பது ஒரு தனிச் சிறப்பாக அமைந்துள்ளது.

இது எல்லா இல்லங்களிலும் இருக்கவேண்டிய ஒன்ருகும்.

விலை:—

பெரிய அளவு ரூ. 1–20
சிறிய அளவு 0–60 காசுகள்

கிடைக்குமிடம்:

மின்னொளிப் பதிப்பகம்
3, மலையப் பெருமாள் தெரு
சென்னை—1

"வீர மரபில் வர்த நெடுமாறனே! கவனியடா என்னை" என்று குரல் திடுக்கிட வைத்தது. எவருக்கும் தெரியாத என் புனை பெயரைப் பலர் நிற்குமிடத்தில் உரக்கக் கூறிய "இடியட்" யார்? என்று எண்ணிக் குரல் வந்த திக்கு நோக்கினேன். அன்பிற்குரிய நண்பர் அமலன் நின்றுகொண்டிருந்தார். அவரிடம் சற்று உரையாடிவிட்டு மீண்டும் அந்த மரத்தடியிலே வந்து நின்றேன். கூடை பின்னுகின்ற அந்தப் பெண் இளநீர்க்காரியிடம் ஏதோ கேட்டுக்கொண்டிருந்தாள்.

இதற்குள் பேரூந்தி வந்துவிடவே, நான் அந்த நிகழ்ச்சியை விட்டு விட்டு, வண்டியைப் பிடிப்பதற்காகக் கூட்டத்தோடு ஒன்றினேன்.

இரண்டு மூன்று நாட்கள் ஓடி விட்டன. அன்று.

வண்டிக்காகக் காத்திருந்தேன்.

பெண் ஒருத்தியின் அழுகுரல் விட்டு விட்டு அலைகளைப்போல் செவிகளில் வந்து விழுந்தது. பேரூந்தி நிலையத்திற் கெதிரேயுள்ள குடிசையொன்றிலிருந்துதான் அந்த அவலக் குரல் எழுந்துகொண்டிருந்தது. மற்றவர்களும் புரியாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கலாயினர். நான் இளநீர் விற்றுக் கொண்டிருந்த பெண்ணின் முகத்தைப் பார்த்தேன்.

"என்ன அது...?"

"அந்த அநியாயத்தை ஏன் சாமீ கேட்கறே — கூடை பின்னிக்கிட்டு அங்கே குந்தியிருப்பாளே, அவ புருஷன் பெரிய சூதாடி...அதோடில்ல.. ...சாமி...குடிகாரன்...பெண்டாட்டி, புள்ளைங்க எப்படியானாலும் சரி...... கவலை கிடையாது...குடிக்கிறது.... சூதாடறது, இதான் வேலை...பாவம்.. இவ கூடை முறம் பின்னி வயித்தைக் கழுவி வந்தாள். அவ சேத்து வைக்கிற காசைக்கூட அடிச்சி போட்டுட்டுப் பிடிங்கிகினு பூடுவான் சாமி, அந்தக் கசமாலம்! நாலு நாளைக்கு முன்னாடி கொயந்தைக்கு ஒடம்பு நல்லால்லேன்னு அவ விசனப்பட்டா, நான்தான் எரக்கப் பட்டு ரெண்டு ரூபா குடுத்து வைத்தியர்கிட்டே போன்னு சொன்னேன். இராவாயிடுச்சேன்னு அவ கொயந்தையைக் காலையிலே வைத்தியர் கிட்டே தூக்கிகினு போலாம்'ன்னு நெனைச்சிருக்கா......அப்ப பாவீ..... என்ன பண்ணிகினான், அந்த ரூபாயை எடுத்துகிட்டதுமில்லாமெ அவ மாத்துக் கட்டிக்கிற புடவை— அதைகூடத் தூக்கிகினுப் போயிட்டான்.........அடவு வைக்க...... கொயந்தைக்கு ராவுலே இசுப்பு ரொம்ப ஆயிட்டுது. வைத்தியர் வூட்டுக்குத் தூக்கிகினுபோயிருக்கா ......காசில்லாமெ வைத்தியம் செய்யற காலமா இது?......படிச்சாங்களாம் பெரிய படிப்பு......காசோட வான்னு அந்த வைத்தியர் கதவை மூடிட்டாராம்......இவளும் என்ன பண்ணுவா? பீடை ஒரு வாரமா கொட்டுதே பனி.....கொயந்தையைக் குளிரிலே தூக்கி வந்திருக்கா......வூட்டுக்கு வந்து பார்த்தா மாத்துப் புடவையும் இல்லை...... வெக்கமில்லாமெ சொல்றேன்னு நினைச்சுக்காதே சாமி...அவ கட்டியிருந்த புடவையை அவித்துப் போர்த்தியிருக்கா...... கொயந்த கண்ணை மூடிடிச்சி......பய, ராஜா வாட்டம் இருந்தான்..."

அவள் கண்களிலே நீர் தாரை தாரையாய் வழிந்தது.

"நாகரிகம்......நாகரிகம் என்று அலைந்து நவநாகரிக போகங்களில் ஒருசில மனித இனம் மகிழ்ச்சியுறுகிறது — தம்மைச் சுற்றிலுமுள்ள இந்தக் கொடிய வறுமையைக் கண்டும், காணாததுபோல். இது உங்களுக்கு வெட்கமாயில்லையா?" என்று மீண்டும் கேட்பதுபோல் கன்றினையிழந்த அத்தாய்ப் பசுவின் அவலக் குரல் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

போய் வா, மகனே! போருக்கு!

ஆங்கிலம் பயிலும் மாணவர்கள் 'Spartan Mothers' 'ச்பார்ட்டா' நாட்டுத் தாய்மாரின் வீரச் செயல்களை ஓதி உணர்ந்து உவகை பூப்பராம். ஆனால் அவர்களுக்கு நம் பண்டையத் தமிழ்த் தாய்மார்களின் மூதிற் சிறப்புத் தெரியாது. நொந்து சுமந்தீன்று, நோவாமல் புரந்த தன் மகவு போர்க்களத்துப் புறங்கொடுத்தான் என்ற போலியுரை கேட்டு "மண்டமர்க்குடைந்தனனாயின் உண்டவென் முலையறுத்திடுவேன் யான்" எனச் சூளுரைத்துச் சுழல் வாளெடுத்துக் களமேகிய தாயும் தமிழ்மகளன்றோ? கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்த தமிழ்க்குடி மகனே! "தொல்லை புகழ் தமிழ் மறவ! எல்லையிலே போர் முழக்கம்! துயில் நீங்கு! வேல் மறவ! விழிபுனல் உகுக்கும் வீட்டரசி துயர் தீர்க்க, பழி தீர்க்கத் துடிக்கும் பழங் கொடுவாளை ஏந்து. இமயத்தில் கல்லெடுத்துச், சீனத்தான் சிரங்கொய்து வா.

உன் அன்பு மகனின் திருமுகத்தைக்கடைசியாகப்பார்த்துக் கொள்ளம்மா! உயிருடன் மீண்டால் என் தலை உன் தாளை வந்து வணங்கும்! இல்லையேல் நாடு என்னைக் கண்ணீரால் குளிப்பாட்டித், தன்னிதயக்கல்லறையிலே புதைத்து விடும்! அந்தப் பெருமை ஒன்றே போதுமம்மா எனக்கும் உனக்கும். இப்படி எத்தனை பேர் தாயே! நாட்டின் நலிவு கேட்டு உன்னிடம் விடை பெற்றிருக்கின்றனர். தாய்க்குலமே வீட்டுக்கொருவன் மட்டும் இருக்கட்டும். மீதி இருப்போரை எல்லைக்கு அனுப்பு! நீ இப்படிச் செய்தால் புராணம் படிக்கும் புலவர் கல்லூரி மாணவரெல்லாம் அதை ஒதுக்கி விட்டு புதுப்பரணி பாடுவர் அம்மா!.... புதுப்பரணி பாடுவர்! என் எழுத்தாணியைக் கீழே வைக்கப் போகிறேன். அதோ என்தாய் கையில் கொலைபணி புரியக் கொலைக்களத்துப் புதிய வேலை வைத்து காத்திருக்கிறாள்...' போய் வரட்டுமா அம்மா.... என்னைப் பெற்றவள் விடை கொடுத்துவிட்டாள்....!

“அவன் அமரனா?”

—[வ. சக்திவேலு]—

கன்னக்கோல் கள்வர்களும்—கள்ளச் சந்திப்புக் காதலர்களும்—'கள்ளச் சந்தை'க் கனதனவான்களும் கண்ணுறங்காத காரிருளிலே—தென்னந் தோப்பிற்குள்ளிருக்கும் அதோ அந்தச் சின்னக் குடிசைக்குள்ளிருந்து மட்டும் ஒரு அகல் விளக்கு — கவிந்திருக்கும் அந்தக் காரிருளை கண்சிமிட்டிக் கேலி செய்வதுபோல ''மினுக் மினுக்''கென எரிந்துகொண்டிருக்கிறது......!

அந்த அகல் விளக்கின் அருகிலே அமர்ந்திருக்கும் அவன்—நெற்றிச் சுருக்க நெளிவின் இடையிலே தேங்கி வழிந்திடும் வியர்வைத் துளிகளைத் துடைத்திடக்கூட நேரமற்ற அவன்–ஏதோ ஓர் ஆவேச வெறிக்கு ஆட்பட்டவன் போல வெகு வேகமாக எழுதிக்கொண்டிருக்கிறான்! இரவு நீண்டுகொண்டே இருக்கிறது! அவன் எழுத்தோட்டமும் தொடர்ந்துகொண்டே போகிறது!!

பக்கம் பக்கமாகத் தங்கு தடையின்றி எழுதிக்கொண்டிருக்கும் அவன் ஓர் எழுத்தாளன்! ஆம்...! ஏழை எழுத்தாளன் ஏகலைவன் என்றால் அந்த வட்டாரத்தில் எல்லோருக்குமே தெரியும்! அவன் இருபத்தைந்து வயதினைத் தாண்டாத இளைஞன்தான் என்றாலும்......நாற்பது வயதினை நெருங்கிவிட்டவன் போன்ற ஒரு முதுமைத் தோற்றத்தின் முத்திரை முகத்திலே! உண்மைச் சிந்தனைவாதியின் உயர்ந்த முத்திரையாய் அவனது நெற்றிச் சுருக்கங்களும் — ஒளிமிகுந்த விழிகளும் விளங்கிக்கொண்டிருந்தன...!

அவனிக்கு அவ்வளவாக அறிமுகமில்லாத ஆரம்ப எழுத்தாளன்தான் என்றாலும் — 'எழுத்துலக விற்பன்னர்'களென ஏற்றிப் போற்றப்படுவோரின் எழுத்துக்களிலே இல்லாத கருத்துச் செறிவும்—கற்பனை வளமும் அவனது கதைகளிலே—கவிதைகளிலே சிறப்புற அமைந்திருக்கும்! இருந்தும், அவன் குவலயம் காணமுடியாத குடத்தினுள் விளக்காகவே வாழமுடிந்தது......!

“குற்றால அருவிக்கு— கொடைக்கானல் — ஊட்டிக்குச் சென்றால் தான் சிந்தனை பிறக்கும்'' என்று கூறிடும் செகப்புரட்டனல்ல அவன்! 'உட்லண்ட்சில்' உணவருந்தி — 'தாசப்பிரகாஷில்' தாகம் தணித்து— 'ஓஷியானிக்'கில் ஒய்யார ஓய்வெடுக்கும்' 'உயர்ந்த இடத்து' எழுத்தாளனுமல்ல அவன்!! எந்த இடத்திலும் — எதையும் எழில் ததும்ப—சுவை நிரம்ப அழகு நடையிலே எழுதிடும் வல்லமை பெற்றவன் ஏகலைவன்! குற்றால அருவியும் — கொடைக்கானல் — ஊட்டியும் அவன் காணாதவைகள்! உட்லண்ட்சும்— ஓஷியானிக்கும் — தாசப்பிரகாஷ்–ம் அவன் கேள்விப்படாதவைகள்!! அவன் கண்டதெல்லாம், கிராமத்தில் நெளிந்தோடும் சுருளியாறும்—வளைந்தோடும் வாய்க்கால்களும்–தென்னைமரச் சோலைகளும்–தேன்கதலித் தோட்டங்களும்—பச்சைப்பட்டு விரித்தாற்போன்ற பசுமைமிகு வயல்களுந்தான்! அவன் உண்டதெல்லாம் ''உலகநாதன் டீ கடை''யின் ஓரணா டீயும்–ஒன்றரையணாத் தோசையுந்தான்!! ஒருசில சமயங்களில் அதற்கே அவனிடம் காசில்லாமல் ஒரு குவளை தண்ணீரோடு ஓட்டிய நாட்களும் உண்டு!!

அழுக்கேறிய ஆடைகள்! அதிலும் ஒரு சில கிழிசல்கள்!! எண்ணெய் காணாமல் பழுப்பேறிய கேசம்! பளபளப்பற்ற மேனி!! இப்படித்தான் எப்போதும் காட்சி தருவான் ஏகலைவன்! என் செய்வது...? அவனென்ன சிங்கப்பூர் சில்க்கிலும்—லங்காஷியர் மல்லிலும் புரளும் ''சினிமாக் கவிஞனா?'' பாவம்! பரிதாபத்திற்குரிய அவன் ஓர் ஏழை எழுத்தாளன்! ஆண்டொன்றுக்கு ஆறு கதைகளாவது அச்சிலே வந்தால் அதுவே அபூர்வம்! ஆச்சரியம்!! அவைகளும் புதிதாகத் துவக்கப்பட்ட பத்திரிகைகளிலே தான்! அதிலும் ஒன்றிரண்டு பத்திரிகை ஆசிரியர்கள்' மனது வைத்து' பணம் அனுப்பி வைத்தால் தான்... .! இப்படி எனில், எப்படி இருக்கும் அவனது வாழ்க்கை...?

பிறந்த சில மாதங்களிலேயே பெற்றோரை இழந்த ஏகலைவன்—எங்கோ ஒரு அனாதை விடுதியின் பாதுகாப்பிலே வளர்ந்து ஓரளவு படித்தான்! படிப்பிலே துடிப்புடன் விளங்கிய அவனுக்கு இளமையிலேயே இலக்கியப் பித்தும்–இலட்சியப் பற்றும் பிடித்துக்கொண்டது! “இலட்சிய வரலாறு”ம்—“பணத் தோட்டமும்” படித்துக்கொண்டிருந்தான் என்று அறிந்ததும், அன்றோடு அவனது பள்ளிப்படிப்பிற்குப் புள்ளி வைக்கப்பட்டு—'அனாதை விடுதி' யிலிருந்தும் விரட்டப்பட்டான்......!!

விடுதியிலிருந்து வீதிக்கு விரட்டப்பட்ட ஏகலைவன் — நகர்ப்புற 'அச்சகம்' ஒன்றிலே எடுபிடியாய்—ஏவலாளாய்ப் பணிபுரிந்தான்! அந்த நேரங்களிலும் அவன் இலக்கியப் பற்றை இழந்துவிடாமல் தொடர்ந்து பல நூல்களைப் படித்துக்கொண்டிருந்தான்! சில நாள் பட்டினி கிடந்து, அதிலே மீதப்படும் தொகையிலே தனக்கே சொந்தமாக ஒரு சில அறிவு நூல்களை வாங்கினான்!!

ஓரளவு இலக்கியப்பற்று உள்ளவனை—ஏழ்மையும் பட்டினியும்தான் ஒரு சிறந்த எழுத்தாளனாக்குகிறது! ஏழ்மையும் பட்டினியும்தான் “ஏன்? எதற்கு?”என்று சிந்திக்கவைத்துச் சிந்தனை வளர்ச்சியைச் செம்மைப் படுத்துகிறது. இதற்கோர் எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்தான் ஏகலைவன்!

பகலெல்லாம் அச்சகத்திலே பணி! இரவெல்லாம் எழுதுவதும்—இறவாத இலக்கியங்களைப் படிப்பதுமாகவே இருந்தான்!

“இளம் எழுத்தாளர்களே! இலக்கியப் படைப்பாளர்களே!! 'தோழன்'

உங்களுக்குத் தொண்டாற்றவே தோன்றியிருக்கிறான்! 'தோழனு'க்கு எழுதுங்கள்! தொண்டாற்ற வாருங்கள்!!'' என்ற பலப்பல பத்திரிகைகளின் விளம்பரத்தைப் பார்த்து அவைகளுக்கெல்லாம் தன் எழுத்தோவியங்களை அனுப்பினான்! ஆனால்—அந்தோ! பரிதாபம்!! அவனது கதைகள் அவைகளில் பிரசுரிக்கப்படாதது மட்டுமின்றி—அவன் அனுப்பிய கதைகளைவிட மிகமிக மட்டமான பல கதைகள் அவைகளில் பிரசுரிக்கப்பட்டு வெளிவந்தன! காரணம்—அவைகளில் எழுதி இருப்பவர்களெல்லாம் விளம்பரம் பெற்றவர்கள்! "இளம் எழுத்தாளர்களுக்கே முதலிடம்'' என்ற விளம்பரமெல்லாம் விநோதமாகவும் — விந்தைக்குரியதாகவும் மாறி, 'விளம்பரம் பெற்ற பெரிய இடத்து' எழுத்தாளர்களுக்கே முதலிடம் மட்டுமல்ல, முழு இடமும் தரப்பட்டு—ஏகலைவனைப்போன்ற இளம் எழுத்தாளர்களுக்கு இடமே இல்லாமல் இருட்டடைப்புச் செய்யப்பட்டது!! பிரசுரிக்கப்படாமல் திரும்பி வந்த கதைகள் சில என்றால், பிரசுரிக்கப்படாமலும் — திரும்பி வராமலும் குப்பைக்கூடைக்குப் போனவைகள் பலப்பல!!

தோல்வித்தீயில் துவண்டுகொண்டிருந்த ஏகலைவனுக்குத் துணைபுரிய ஒரு சில உண்மையான பத்திரிகாசிரியர்களும் இருக்கத்தான் செய்தனர்! ஏதோ அத்திபூத்தாற்போல அவனது ஒரு சில கதைகள் பிரசுரமாகிக்கொண்டிருந்தன. அவைகளை அச்சிலே கண்ட ஆனந்தக் களிப்பிலே அவன் உணவை மறந்து—உலகை மறந்து மதிமயங்கி நின்ற நாட்கள் பல உண்டு!!

"தொழிலாளி—முதலாளி பிரச்சினை''யை மையமாக வைத்து அவன் எழுதி வெளிவந்த ஒரு சிறு கதையைப் படித்த—அவன் வேலை பார்த்துவந்த அச்சக முதலாளி, அக்கதை அவரையே தாக்குவதைப் போல அமைந்திருந்ததைக் கண்டு —அன்றைய தினமே, எடுபிடிவேலை பார்த்த ஏகலைவனை, 'இனி அச்சகத்திற்குள் அடி எடுத்துவைக்காதே? படி ஏறாதே!! வெளியே போ!' என எச்சரித்து வெளியேற்றினார்!!

அச்சகத்தின் ஆதரவையும் இழந்த ஏகலைவன்—நண்பனொருவனின் உதவியால், கிராமத்தில்— அந்த நண்பன் தந்த குடிசையில் தங்கித் தனது இலக்கியப்பணியைத் தொடரலானான்! "ஒரு பாட்டில் 'அது' அருந்தினால்தான் ஒன்பது வரியாவது எழுத முடியும்'' என்று கூறிடும் 'ஆடம்பர' எழுத்தாளர்களுக்கே ஒரு சவாலாக, ஒரணா டீயைக் குடித்துவிட்டு ஒரு நூறு பக்கங்களில் உயர்ந்த கருத்துக்களை—உன்னத தத்துவங்களை எழுதிமுடிப்பான் ஏகலைவன்! ஆனால் —அவைகள் இலக்கியச் சந்தையிலே செல்லாக் காசாக — செல்லரித்த நோட்டாகவே போயின! பிறர் எழுத்தைத் திருடி — அவைகளுக்கு ஒருசில மேற்பூச்சுக்கள் பூசிப்—பளபளப்புடன் வெளியிடும் இலக்கியத் திருடர்களின் 'போலி' எழுத்துக்களே விலை போயின! விளம்பரமாயின!! போலிச் சிந்தனைக்குப் புகழ்! சுய சிந்தனைக்கு இருள்!! இலக்கியஉலகின் இந்த இழிநிலையை இருட்டடைப்பு வேலையைக் கண்ட ஏகலைவன் ஏமாந்தான்! எனினும் அவன் தன் எழுத்துப்பணியை விட்டுவிடவில்லை......! தொடர்ந்து கொண்டே இருந்தான்......!! நாட்களும்— மாதங்களும் நகர்ந்து கொண்டிருந்தன! ஏகலைவனின் இலக்கியப் பணியும் — வறுமைப் பிணியும் வளர்ந்து கொண்டேயிருந்தது...?!

இந்நிலையில் ஓர்நாள்!

"எழுத்தாளர்களுக்கோர் இனிப்புச்செய்தி! நெஞ்சம் பூரிக்கும் நெடுங்கதைப் போட்டி! பரிசு ரூபாய் இருபத்தையாயிரம்! உலகம் புகழும் செந்தமிழ்ச் செல்விக்கு "செந்தாமரை'' படைக்கும் செந்தேன் விருந்து! அழகுதமிழ் எழுத்தாளர்களே அருந்த வாரீர்! வாரீர்?!'' என்ற "செந்தாமரை'' எனும் இலக்கிய இதழின் விளம்பரத்தைக் கண்ட ஏகலைவன் — இதயப் பூரிப்புடன் நெடுங்கதைப் போட்டிக்கு எழுதத் துவங்கினான்......!!

இரவும் பகலும்—எந்த நேரமும் 'எழுத்து மங்கை'யோடு இணைந்து கிடந்தான்! பொழுதுவிடிந்தால், போட்டிக்குக் கதை அனுப்பவேண்டிய கடைசி நாள்! அவனது நெடுங்கதையும் இறுதிக்கட்டத்தை நெருங்கிக்கொண்டிருந்தது!

○

அந்த நள்ளிரவில்—அகல் விளக்கின் ஒளியிலே—'தாள்' எனும் அரங்கில்—'பேனா' எனும் பேரழகி நடனமாடிக்கொண்டிருந்தாள்? நேரம் ஏறஏற 'அவளின் நர்த்தனத்திலே ஆவேசமும் — ஆங்காரமும் அதிகரித்துக்கொண்டே போயிற்று!!

ஆம்...? ஏகலைவன் எதையுமே மறந்தவனாய்—"நாளை இறுதி நாள்'' எனும் எண்ணத்துடன் பேனாவை ஓட்டிக்கொண்டிருந்தான்! முகத்திலே அரும்பி நிற்கும் முத்துமுத்தான வியர்வைத்துளிகளைத்துடைத்திடக்கூட நேரமில்லாமல் நெடுங்கதையைப் பக்கம் பக்கமாக எழுதிக்கொண்டிருந்தான்?

எங்கிருந்தோ ஒருசேவல்—"கொக்கரக்கோ!'' என்று கூவவும் ஏகலைவனின் நெடுங்கதை முடியவும்—அகல்விளக்கின் ஒளி குறையவும் நேரம் சரியாக இருந்தது!!

○

போட்டிக்குச் சென்ற நெடுங்கதைகள் பஞ்சாயத்தாரின் பரிசீலனையிலிருந்தன...!

பலநாள் பட்டினியோடு, ஊண்—உறக்கம்—உலகம்—அனைத்தையும் மறந்து எழுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையால் ஏகலைவனின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டு—படுத்த படுக்கையானான்! இடையிடையே உதவிகள் செய்துகொண்டிருந்த அந்த நண்பனும் இப்போது ஊரில் இல்லை!!

நோயும், பட்டினியும் — பாயும், படுக்கையுமாய்த் தள்ளி — அந்த இளம் எழுத்தாளனை தேயும் நிலவாக்கியது!! "ஏன்'' என்று கேட்க எவருமே இல்லாமல் அந்த ஏழை எழுத்தாளன் குடிசைக்குள்...... நோயோடும் — சாவோடும் போராடிக்கொண்டிருந்தான்!!

○

பஞ்சாயத்தாரின் பரிசீலனையிலிருந்த நெடுங்கதைகளின் போட்டி முடிவுகள் வெளியாயின...!! அதில் —ஏகலைவன் எழுதிய "அவன் அமரனா...?'' எனும் நெடுங்கதையே முதற்பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு — "செந்தாமரை'' அலுவலகத்திலிருந்து அவனுக்கு அஞ்சல்மூலம் தகவல் அனுப்பப்பட்டது...!!

அஞ்சல் சேவகன் கொண்டுவந்த ஆனந்தச் செய்தியைக் காண்பதற்குமுன் — ஏகலைவனின் உயிர் 'எங்கோ' பறந்துவிட்டது! குடிசைக்குள் — அனாதையாகச் செத்துக்கிடந்த அந்த ஏழை எழுத்தாளனின் பக்கத்திலே, ஆனந்தச் செய்தி'யைச் சுமந்துவந்த அந்தக் கடிதமும் அனாதையாகக்கிடந்தது ....?

●

கல்லறையில் இருந்து....!

பாண்டியன்

அன்றொரு நாள்!

மாலை வேளை!

அந்திவானை நோக்கியவண்ண மிருந்தேன். போர் மேகங்கள் இந்திய பூபாகத்தை நெருங்கிய நேரம். உலகமெங்கும் அமைதி யற்ற கொந்தளிப்பு. பண்பிழந்தவர் போக்கிலே, வெறிகொண்டவனின் விவேகமற்ற செயலாய் ஆக்கிர மிப்புப் போர்வையைமூடிக்கொண்டு சீனாவின் வாலாட்டம் நமது பூமியின் சொந்தக்காரர்களைக் கேட்டுக்குத் தூண்டியது. இதையெலாம் எண் ணியவண்ணமாய் இவ்விசித்திரமான உலகத்தின் நடவடிக்கையைக் கவ னித்தேன். அதிலேதான் எத்தனை பிழை! எத்தனை கோணல்!!

இராணுவக்கூடாரத்தின் தூணில் சாய்ந்துகொண்டிருந்த என்னைத் தேடி, பஞ்சாபித் தோழன் ஒருவன் வந்தான். "அடே! பாண்டியா! உனக்குத் தந்தி" என்றான். தந்தி யைப் பெற ஓடினேன்! அவனுக்கு நன்றிகூடச் சொல்லாமல். அவனும் என்னைப் பின்தொடர்ந்து வந்தான். தந்தியை வாங்கினேன். உடைத் தேன்! பிரித்தேன்! அங்கிருந்தது சில வரிகளே! அந்த வரிகள் என் னைப் பட்டமரமாக்கியது!

எனது குலமங்கை, ஆம்; அருமை மனைவியும், ஒரே குலக்கொடியுமான மகனும் அம்மை நோய்வாய்பட்டு இறந்துவிட்டார்களாம்.

வேதனை நிறைந்தது! எனைத் தொடர்ந்தது! அந்தப் பஞ்சாபி நண் பன் விரகதாபத்தால் துன்பம் கொண்ட காதலியைப்போலக் காணப்பட்டான்.

உலகத்தின் விசித்திரமான தோற்றமும், காலத்தின் தடங்க லற்ற ஓட்டமும் என் இதயத்தின் குமுறல்களை அதிகப்படுத்தின.

எனது ஆருயிர் மனைவி எனை விட்டுப் பிரிந்துசென்றாள். ஒரே மகன் அவனும் உடன் சென்றான். நினைத்து நினைத்து நெஞ்சம் புண் ணாகியது!

இந்நேரம் டெல்லிமாநகரின் இராணுவக் கூண்டிலே நான் இருந் தேன். நான் இருந்த பட்டாளத்தில் நானே தமிழன். வேறு ஒருவரும் இல்லை. மண்ணாசை பிடித்த சீனா வின் வெறியை அடக்கி ஒடுக்க எங்கள் இராணுவ முகாம் மாற்றிச் செல்லப் பத்துநாட்கள் தவணையே இருந்தது! எங்கள் அணிவகுப்பு 'நேபா'வை நோக்கிப் புறப்படத் தயாராகிக்கொண்டிருந்தது. அதற் குள் இந்தத் தந்தி! எனது கனவிலும் நினைத்ததில்லையே இதை! புதுவித மான இராணுவ ஆயுதங்களை ஏந்திப் போர்ப் பயிற்சி செய்துகொண் டிருந்த எனக்கு இச்செய்தி பேரிடி யாக இருந்தது. எங்கேயோ, சீன னைக் குண்டால் அடித்துக் கொல் வது போன்ற சிந்தனைகளில் சுழன்றுகொண்டிருந்த என் போர் உள்ளம், அலைபோல அலைவுற்றது சிந்தனையெலாம்குடும்பத்தைச்சுழன் றது. பத்தாண்டு இராணுவ வாழ் வில் இப்படியொரு சேதி நான் பெற்றதில்லை.

"பாண்டியா! உன்னுடைய குடும் பம் கவலையான நிலமையில் இருக் கிறது. நம் நாடும் அதே மாதிரி தான், விடுமுறைக்கு விண்ணப்பிக் கப் போகிறாயா?" இவ்வாது ஆந்திர நண்பர் நாகேஷ் கேட்டார்.

"நாகேஷ், என் மனம் பெரும் பாரதத்தைத் தாங்கிக்கொண்டிருக் கிறது ஒருபுறம்! மற்றொருபுறம் என் துணைவி நினைவாய் பெரும் துன்பத்தைச் சுமந்துகொண்டிருக் கிறேன். இதனால் எதை விடுப்பது, எதைச் செய்வது என்ற சிந் தனைக்கே முட்டுக்கட்டை விழுந்து விட்டது" என்றேன்.

"நான் சொல்கிறேன் விடுமுறை சுருக்கமாகப் போடு, திரும்பிடு" என்றான் நாகேஷ்.

"தென்னகத்தில் பாண்டி நாடெங்கே! டெல்லிமா நகரெங்கே! போய் வர மட்டும பத்து நாட் பிடிக் குமே! என்றால் எதுவும் இப் பொழுது செய்ய முடியாது. எனைத் தனிமையில் விடு" என்று கூறி விட்டு நகர்ந்தேன். அப்பொழுது எங்களுக்கு ஏரராளமான கட்டுப்பாடு கள் இருந்தன. ஒருமணி நேரந்தான் வெளிச் சென்றுவர. இராணுவ இருப்பிடத்தை நெருங்கியுள்ள புத் தர் பூங்காவுக்குள் சென்றேன். அமைதியும், அழகும் நிறைந்த அந்த மனித தெய்வமான புத்தனைக் கண்டேன். அந்தச் சீர்திருத்த வாதியை நோக்கியவண்ணமாய் அமர்ந்தேன்.

வானத்தை நோக்கினேன். எனக்கு அருகேஉள்ள இருக்கையில் இருந்த இரு இந்திக்காரர்கள் என் னைப்பற்றிப்பேசினர். நான்இராணுவ வீரனென்றும், மிகவும் கவலையடைந் திருப்பதாகவும் பேசினர். எனக்கு மறைமுகமாக ஆறுதல் அளித் தனர். இராணுவத்தின் நிலமையை உணர்ந்து பேசினர். அவர்கள் எழுந்து சென்றனர். எனது குடும்ப நினைவில் சுழன்றேன். அடுத்து

வரும் கடிதத்தைப் பார்த்துவிட்டு விடுமுறைக்கு விண்ணப்பிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தேன். எனது அருமைத் தம்பியின் கடிதத்தையும் எதிர்பார்த்தேன்.

எல்லை நிலவரங்கள் பற்றிய முக்கிய செய்திகளைப் பிரதமமந்திரி வானொலியில் பேச, புத்தர் பூங்கா அதைப் பிரதிபலித்தது. உணர்ச்சி மிகுந்த அந்தப் பேச்சில் என் உள்ளம் திசைமாறியது. எனையறியாமலே கைகள் இரண்டும் அந்த மாறெருந் தளபதியை பணிந்தது. முகாமுக்கு வந்தேன்.

இராணுவ இருப்பிடத்தின் வாயிற்படியில் கால் ஊன்றியதும், மற்றொருசெய்தியும் காத்துக்கொண்டிருந்தது. பத்துநாட்களாக இருந்த இராணுவமுகாம் மாற்றலின் தவணை ஐந்துநாட்களாகக் குறைந்தது. இராணுவ வீரனுக்குக் கடமையின் விரைவும், கட்டளையும் விரைவாகக் கிட்டிவிடுகிறது, நிச்சயமற்ற எங்கள் வாழ்வில் சிந்தனையெலாம் எதற்கு என்றே எண்ணினேன். வருங்காலம் என்பதைப்பற்றிச் சிந்தனையே கூடாது என்றும் நினைத்தேன். வெளியில் உள்ளவர்கட்கும் எங்கட்கும் உள்ள முக்கியமான வேற்றுமைகளை உணர ஆரம்பித்தேன். இந்த நெருக்கடியில், இராணுவத்தின் பலத்தை நம்பி இருக்கும் மக்களைப்பற்றி என்னால் எதைத்தான் சொல்லமுடியும்?

நாங்கள் செய்வது மாற்றான் நெஞ்சிலே குண்டுபாய்ச்சி, மண்ணை மீட்டு மானத்தையும், கௌரவத்தையும் காப்பாற்றவேண்டும்! இதுதானே!

இந்திய மக்கள் அனைவரும் இராணுவ வீரர்களாக மாறத் துடித்துக்கொண்டிருந்தார்கள். மக்களுக்கும் இராணுவத்துக்கும் தொடர்பு சுருங்கியது. 'மக்களே இராணுவம்; இராணுவமே மக்கள்' என்கிற புதிய நிலைமை உருவானது.

மூன்று நாட்கள் எனது கண்கள் தூக்கமின்றி இருந்தன. என் இதயம் அமைதியின்றி அலைந்தது.

வரப்போகும் மரணத்தையோ, வீர வரலாற்றையோ, வெற்றிவாகை அணிவதையோ நான் எண்ணிப் பார்க்கவில்லை. நான் இறந்தாலும் நமது பூமி தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமென எண்ணினேன். ஆனாலும் என் சஞ்சல மனமோ ஏன் குடும்ப நினைவில் பெரிதும் ஈடுபாடு கொண்டது. நிலையின்றித் தவித்தேன்.

என்னைத் தேற்றின நண்பர்கள் கூட மௌனமாயினர். அவர்களும் என்னைப்போலப் பயணப்படுகிறவர்கள். நாள் நெருங்க நெருங்க எல்லோருக்கும் அமைதியில் சிறுகளங்கம் உண்டானது. என்ன செய்வது? நாட்டு வாழ்வு வீறு பெற வேண்டுமே! இதுதானே ஒவ்வொருவனின் குறிக்கோளாக இருக்க வேண்டும்!

என் தந்தையிடமிருந்து கடிதம் வந்தது. ஒருமாத காலமாக நோயினால் துன்பப்பட்டாளாம் என்மனைவி. எனது மகனும் அவ்வாறுதானாம்! திடீரென இறந்துவிட்டார்களாம்! இதைப் படித்த உடன் வீறிட்டுக் கத்திவிட்டேன். இதைவிடக் கொடிய உலகம் எனக்குண்டா! என்னையே எண்ணி எண்ணி நெஞ்சம் வெந்து கொண்டிருந்திருப்பாளே! எந்தன் வரவை எதிர்நோக்கி இருந்திருப்பாளே! தான் இறந்தாலும் தன் மகன் பிழைத்திட்டால் போதும் என மனக் கண்ணில் நினைவைக் கொண்டு களித்திருப்பாளே! இப்படியெலாம் வாய்கொண்டு புலம்பிவிட்டேன்!

மேலும் அந்தக் கடிதம் பகன்றது!

என் மனைவி இறப்பதற்கு முன்பே மகன் இறந்துவிட்டானும்! கொடுமையிலும் கொடுமை. என் மனைவி ஆறுதலின்றி உலக வாழ்வை நீக்கியிருப்பாள்! அவள் என்ன கனவெலாம் கண்டாளோ? மகப்பேறுக்குச் சென்ற கொடிதானே! மண்ணுக்குள் சென்றுவிட்டாள்! பார்த்து வருடம் ஒன்றாகுது. என் இதயத் தாமரை என்னவெல்லாம் எண்ணியிருந்திருப்பாள்? முடிந்து முற்றுப்பெறாத இளமைத் துடிப்பின் களிப்பை எவ்வாறெலாம் பகிர்ந்து கொள வேண்டும் என எத்தனை கற்கோட்டைகள் அமைத்திருந்தாளோ? என் வருகையைப் பொங்கல் நாளின் இனிமையில் காண்பாய் என எழுதியிருந்தேன். பொங்கலுக்குக் காத்திருந்திருப்பாளே அந்தப் புதுப் பொங்கல்! பொல்லா உலகம் பூங்கொடியைப் புழுதியாக்கியதே! மகனை மண்ணுக்கு இரையாக்கிவிட்டு எப்படி இறக்கச் சம்மதித்தாள். மரணம் வருமென்று நினைத்திருக்கவே மாட்டாள்.

"நான் அந்தச் சேதியை ஒரு மாத காலமாகத் தெரியப்படுத்தவில்லை. அதற்குக் கவலைப்படாதே! எல்லாம் இயற்கையின் செயல்!" இன்னும் எது வேண்டும்? இவ்வாறு தந்தை தன் கடிதத்தை முடித்திருந்தார்!

என் தம்பிகூட இதை எழுதாமல் இருந்தானே! இதை உணர்ந்துதான் மீண்டும் வருத்தமுற்றேன்! அவன் கடிதத்தை எதிர்நோக்கி இருந்தேன். இன்னும் இரண்டு நாட்கள் எங்கள் பயணம் தொடங்கிவிடும். போருக்குச் செல்வதெனத் தீர்மானித்துவிட்டேன். நான் யாருக்காக வாழவேண்டும்! ஒருத்தி இருந்தாள் இதயம் நிரம்பி! அவளோ பிரிந்து சென்றாள்! எங்கோ பயணமாகி எங்கேயோ முடிவு பெற்றாள்! நாட்டுக்குத் தியாகம் செய்வோம் உயிரை! தம்பியும் தந்தையும் எப்படியும் வாழ்வர்! என் மனம் சற்று அமைதி அடைந்தாற்போல் தெரிந்தது.

விடுமுறை கழியுமுன் விரைவாக அழைக்கப்பட்ட நண்பன் வாசு என் முன் நின்றான். ஆச்சரியமானேன்!

"பாண்டியா. நீ எப்படியப்பா மனைவியிடம் விடை பெற்றாய் போருக்கு? உன்பாணி தமிழ் முறைப்படி எப்படி?" அவன் கேட்டான்.

"வாசு, நீ எப்பொழுது வந்தாய்?" நான் விசாரித்தேன்.

"இப்பொழுதுதான் வந்தேன்" என்றான்.

"உன் மனைவி விடை கொடுத்தாளா......" நான் கேட்டேன்.

"அதையேன் கேட்கிறாய். நான் மிகவும் கஷ்டப்பட்டேன்" என்றான்.

"வாசு! நான் யாரிடம் விடை பெற்று வீரப்போர் புரிய ஆவல் கொண்டிருந்தேனோ, அவள் இருந்த உலகத்தின் நெருக்கடியைக் கண்டு மனம் வெதும்பி நம்மையெலாம் சபித்துவிட்டு அவளும், அவள் பெற்ற செல்வத்தோடும் மாண்டு போனாளாம்!" புரியாத நண்பனிடம் புகன்றேன்.

"என்னப்பா! உளறுகிறாய்?" திக்கித் திணறித் தமிழில் பேசினான் அந்த மைசூர் நண்பன்.

"என் மனைவி உலகின் பாதையினின்று விலகிச் சென்றுவிட்டாள்"—நான் உரைத்தேன். சென்ற ஆண்டு பந்தாட்டத்தில் காலில் அடிபட்டு நாங்கள் உனை அழைத்துச் சென்றபோது அந்த வீடெல்லாம் நிறைந்து நின்ற திருநிறையவள் மரித்துவிட்டாளா? எவ்வித உணர்வில் அன்று உனை அனுகி

ளுள்! கண்களில் உனை நிலைநிறுத்தி, உள்ளத்தால் வருந்தி எங்களைத் திகைப்படையச் செய்த அம்மணியை உன்னால் காண முடியாதா?'' கண்ணீர் பொங்கச் சொன்னான் என் கண்நிறைந்த வாசு!

"முடியுமா? முடியும் காரியமா?! நண்பா! அவள் புரிந்தவைகள் அது மட்டுமா? கன்னித்தமிழ் மகள்! கன்னி நாட்டுப் புதல்வி! பாண்டியனின் திருமகள்! விடைதர மனம் சிறிது அஞ்சுமோ என்றவளாய், ஏகமாய் விடை ஈந்துவிட்டு விளக்கணையச் சென்றுவிட்டாள். கன்னக்கதுப்பாளை என்று காண்பேன்? அவள் கல்லறையிலிருந்து நமைப் பார்க்கிறாள். நண்பா! அமைதியைக் கலைக்காதே! கவலையைத் துறந்துவிட்டேன்'' என்று கூறினேன்.

படுக்கைக்கு விடை பெற்றோம் இருவரும்.

அன்றிரவு நான் என்னையறியாமலே தூங்கிவிட்டேன். நான்கு மணிக்கு முதல் மணி அடித்தது. படுக்கையில் எழுந்து உட்கார்ந்தேன். நாலரை மணிக்கு மீண்டும் மணி கொடுத்தார்கள். காலைக்கடனை முடித்துவிட்டுத் துப்பாக்கிப் பயிற்சிக்கு சென்றேன். மதியம் போல 11-மணிக்கு ஓய்வு இருந்தது. எனது அறைக்குத் திரும்பிக்கொண்டிருந்தேன். எனக்கு வந்திருந்த கடிதமொன்றை நண்பன் நாகேஷ் என்னிடம் கொடுத்தான். [அது தம்பியிடமிருந்து வந்திருந்தது] கடிதத்தைக் கண்டவுடன் புதியதோர் உலகிலே நான் சஞ்சரித்தேன்! எனது தம்பியின் கடிதங்களே எனக்கு ஆறுதலும், களிப்பும், தரக்கூடியவை. அவன் எழுதும் ஒவ்வொரு கடிதமும் பெரிய மேதையின் எழுத்தாக இருக்கும். தமிழ் இலக்கியம் கற்றவன். இலக்கியவரிகளை உவமைகளாகக் காட்டிப் பேசுவான்! பெறற்கரிய பேறுபோல அக்கடிதங்களை எண்ணுவேன். எனக்கு ஓய்வு கிடைக்கும்போதெலாம் அவன் எழுதிய பழைய கடிதங்களை எடுத்து வாசித்து இன்புறுவேன். அது என் அன்றாடப் பழக்கமாகவும் மாறியது. [அவன் கடிதம்]

அருமை அண்ணாவுக்கு,

தம்பியின் வணக்கங்கள். அண்ணியின் மரணம்பற்றி ஏன் எழுதவில்லை என்று வருத்தப்படவேண்டாம். அந்தச் சேதி எனக்கே தெரியாது. கல்லூரியிலிருந்த எனக்குக் கூடத் தெரியப்படுத்தவில்லை. அப்பா இந்த விஷயத்தில் தவறிவிட்டார். என்னை மன்னித்துவிடுங்கள்.

அண்ணி இல்லை. பெற்ற மகவும் இல்லை. அவர்கள் இருந்திருந்தால் வெற்றித் திலகமிட்டு உங்களைப் போர்க்களம் செல்லவிட்டிருப்பார்கள். எதற்கும் மனம் சோம்பவேண்டாம்! விடுமுறையும் எடுக்கவேண்டாம்!

அன்னியக்கூலி நம் எல்லையைக் கடந்து படைதிரட்டி வந்துவிட்டான்! வாழ்வா? சாவா? இந்நாட்டிலுள்ள அனைவரும் கேட்கிறார்கள். பார்த்திடுவோம் எனச் சூளுரைத்துவிட்டார்கள். அண்ணா! நீங்கள் பட்டாளத்து வீரர். கடமை உங்களை வாவாவென அழைக்கிறது. கல்லறைகள் தோண்டப்பட்டுவிட்டன! வெற்றியோ? தோல்வியோ? அறத்துக்கும் மறத்துக்கும் போர்! உங்களின் ஒவ்வொரு சொட்டுக் குருதியும் அன்னியன் படையெடுப்பைக் களைந்திட உதவட்டும்!

தென்னகத்தின் போர்மகன்! பாண்டியன் வழித்தோன்றல்!பொன்வரியில் எழுதவல்ல நெறிபடைத்த செழியன் குலம்.

இதைமட்டுமா எழுதினான்!

பெண்ணரசிகளின் வமிசாவழி! பெண்மையும் உலகிலே நாடாண்டது என்பதை நாமும் செய்து காட்டியிருக்கிறோம். இதுவல்லநேரம் நம் இனத்தவர்கள் செய்ததை எல்லாம் விவரிக்க! எதிரி உதிரம் குடிக்க வருகின்றான்! நமைநோக்கி! நாம் அவன் குருதியைக் குடிக்க முன்னேறுவோம்! எதிரியைநோக்கி! வீரச்சுவை நிறைந்த அவன் கடிதம் இன்னும் எழுதியது!

'எங்கோ ஒருவன் எதையோ தொட்டோ தொடாமலோ கெடுத்தான்' என்கிறதாக இருக்கிறது நம் கதை!

நமது மண்ணில் அந்நியன் கால்கள் பழக்கத்துக்கு மாறாகப் பதிந்துவிட்டன! நம் வீரம் நிலைத்திருந்தால் அவனைச் சிறைப்பிடிக்க முடியும்! மாசற்ற பணியாக ஏற்று வென்று வருக!

இதைத்தான் எழுதினானா? இல்லை இன்னும் எழுதினான்!

ஏன் பிறந்தோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்கச் சொன்னான். வாழும் காலம் குறுகியது! நம் உடல் பொருள் உயிர் அனைத்தும் தூய்மையின் வடிவாக இருந்து மடியட்டும்!

புராணங்களிலும், இதிகாசங்களிலும்கூட வீரத்துக்குத் தருகின்ற மதிப்புத் தனியானது! ஏராளமாகக் கூறலாம். வெற்றிக் குருதியுடன் வீர நடைபயின்று வருகையில் உரைக்கிறேன் மேலும்!

நீங்கள் சென்று வருக! இதயபூர்வ வாழ்த்துக்கள்! நீங்கள் வாழ்க நாட்டுக்காக! எங்கள் வாழ்வு உங்களுக்காக! எங்களுக்காக நீங்கள்! உங்களுக்காக நாங்கள்! எல்லோருக்குமாக நாடு! நம்பூமி! அன்னியன் வந்தால் அவனுக்கு இடமளிக்கலாமா?

வெற்றியுடன் நீங்கள் திரும்பி வரும்போது உங்கள்மேல் வீரக் காவியம் பாடுகிறேன்! போய்வருக! வென்று வருக! உமக்கு நிகர் நீரே! சிங்கத்தையும், புலியையும் உபமானம் கூறேன்! ஒற்றுமைப்படுத்தேன்! அன்புப் பிணைப்பு அவிழ்க்க வியலாதது! ஆனாலும் அண்ணனுக்கு விடை அளிக்கிறேன்! உமது வீரம் உலகுக்கே சவாலாகட்டும்! பொங்கிவரும் புதுநீரே! போய்வருக! தமிழ் வீரா! உனக்குத் தாயில்லை! சேயில்லை! தனக்காக ஒரு இல்லாளும் இல்லை! நானுண்டு! நல்ல ஓர் தம்பி! நலமாக ஓர் தந்தையுண்டு! விடைதந்தேன்! போய்வருக! உனக்காக நான் காத்திருக்கிறேன்! உன் மார்பழகைக்காண! கனிமுகத்தைக் காண! கண்டுகண்டு பேசிமகிழ! பூமியுடன் வருக! புது மெருகுடன் வருக! நாடுடன்வருக! நலத்துடன் வருக! இப்படிக்கு அன்புத்தம்பி 'வழுதி'யாம்.

இப்படித்தான் என் தம்பி அணி செய்து அழகுமடல் தீட்டியிருந்தான். தம்பியின் கடிதமா? தளபதியின் வீரவணக்கமா? என்னாலே உணர முடியவில்லை!

'உயிரைக் கொடுத்துவா' என்றுதான் என் தம்பி கூறவில்லை. ஆனாலும் அவனுள்ளம் அதற்கும் சம்மதிக்கும்! நான் அதிர்ச்சி அடைவேனோ என்று எழுதவில்லை. எனக்கு இப்படி ஒரு தம்பி கிடைத்தது எவ்வளவு பேறு!

எங்கள் இராணுவப் பயணம் ஓர் நாள் இடைவெளியில் நின்றுகொண்டிருந்தது. உலகெங்கும் நம்வீரருக்கு மரியாதைகள் குவிந்தன. ஒருபடைஞர் பலபேரைச் சுட்டு வீழ்த்திவிட்டு வீரமரணம் அடைந்ததைக்கேட்டு இதயம் பூரித்தேன்!

போர்க்களம் என் சிந்தனைக்கு வந்தது. எதிரியின் முன்னால் நிற்கும் நிலமையைக் கற்பனைக் கண்ணால் பார்த்தேன். அந்த உணர்ச்சி ஏதோ ஒரு புதியதுதான்! இருவரும் மனித குலம்! மனித உணர்ச்சி

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

விரட்டப்படுகிறது. வறண்ட போக்கு உப்புச் சப்பற்ற மனிதாபிமானம். இரத்த வெறி பிடித்த கொள்கை ஏனோ? நான் சிந்தித்தேன்! ஒன்றும் புலப்படவில்லை. இங்கே மனித அறிவாற்றலின் மிக உயர்ந்த நிலையையும், அதேபோல மிகத் தாழ்ந்த புத்தியையும் காணமுடிந்தது!

விடிந்ததும் எங்கள் பயணம் ஆரம்பமானது. நாங்கள் விமானத்திலேயே பயணம் செய்தோம். ஹெலிகாப்டர்கள் எங்களை தேஜ்பூரில் இறக்கிற்று. அங்குள்ள மக்கள் எங்களை அன்பால் ஆலிங்கனம் செய்தார்கள். அங்கு சென்றதும் ஏற்கனவே போரிடும் வீரர்களின் புனிதப் போரின் வெற்றிச் செயல்களைப் பகிர்ந்துகொண்டோம்! மேலும் நாங்கள் 100 கற்களுக்கு மேல் பயணம் செய்யவேண்டும். அங்குதான் சண்டை நடந்துகொண்டிருந்தது. மீண்டும் நாங்கள் பயணம் தொடர்ந்தோம் அதே விமானத்தில். ஆங்காங்கே நாங்கள் இராணுவ முகாம்களில் இறக்கப்பட்டோம். எங்களைப் பார்த்தவண்ணமாய் எதிரிகள் குண்டுகள் பொழிந்துகொண்டிருந்தனர்.

நான் பாஞ்சாபித் தோழன் ஒருவன் இருவரும் அடர்ந்த புதரில் எதிரியை நோக்கிக் குறிவைத்த வண்ணமாய் இருந்தோம். எங்களுக்கு முன்னால் கடல் மணலாய் குண்டுகளை வீசிக்கொண்டிருந்த சீனர், சிறிது தளர்ந்தனர். ஐந்தோ பத்தோ அடங்கிய கூட்டம் முன்னேடி வந்தனர். என் கண்களுக்கு மிகவும் நன்ருகத் தெரிந்தது. குண்டுகளை இடைவிடாது செலுத்தினேன். எல்லோரும் அநேகமாக மரணக் குறிப்பேட்டில் இணைக்கப்பட்டிருப்பர். சீனர் முன்னேறவில்லை. அன்றிரவு தூங்கத் தளத்துக்கு வந்தோம்!

அதிகாலை எதிரி எங்களை வெகுவாக அணுகியிருந்தான். இரு பக்கமும் குண்டுகள் பொழிந்தன! எங்கள் பக்கம் சிறிதே சேதம். குறிவைத்த முகாமைப் பிடிக்கமுடியவில்லை. சிறிது நாழிகையில் ஓய்ந்தனர். மீண்டும் மதியத்துக்குமேல் தொடர்ந்தனர். நாங்களும் தயாராக இருந்தோம்! வெகு அருகாமையில் இருந்துகொண்டு மோதினோம்! தொடர்ந்து மூன்று மணிநேரம் நடந்தது. நான் நின்றிருந்த குழி சூடு கொண்டுவிட்டது. குண்டுகளும் காலியாயின. அந்த அளவில் போர் நின்றது. எங்களுக்குத் திருப்தி! மீண்டும் சப்ளைகள் நிறைந்தன. தளத்தை மிகவும் நேர்த்தியாகக் காவல் செய்தோம்!

இரண்டு நாட்கள் போரின் வேகம் தணிந்தது. பெயரளவில் எங்கோ வெடிச் சத்தம் கேட்டது. எங்கள் உற்சாகம் குறையவேயில்லை. வஞ்சக எண்ணங்கொண்ட சீனர் இத்துடன் நிறுத்திடுவர் என்று நாங்கள் ஏமாறவில்லை.

போரில் ஈடுபட்டு நாலாவது நாட் தொடக்கத்தில் நான் ஓர் தமிழரைச் சந்தித்தேன். அன்றுதான் அவர் காஷ்மீரத்திலிருந்து நேபாவுக்கு அனுப்பப்பட்டிருந்தார். அவரைக் கண்டது இறந்த மனைவியைச் சந்தித்ததுபோல் இருந்தது. என் நெஞ்சம் நிறைந்த அவர் தஞ்சைக்காரர் என்றறிந்தேன்! அவரும் அன்றையப் போரில் ஈடுபட்டார்! அவரவர்கள் போர்ப் பணிக்குச் சென்ருேம். மாலையில் நாங்கள் தளத்துக்கு விரைந்தோம்! தமிழரைக் காண ஆவலாய் அவரின் கூடாரத்துக்குப் போனேன். அங்கும் எனக்கு ஏமாற்றமே! அவர் அன்றைய சண்டையில் எதிரியின் குண்டுக்குப் பலியானுர்! என் இதயம் என்ன வேதனை அடைந்தது தெரியுமா? அப்பொழுது நான் என்ன எண்ணினேன்? இந்த உலகத்தையே அழிக்கும் ஆற்றல் என்னிடமிருந்தால் தீர்த்துக் கட்டியிருப்பேன்!

மறுநாள்! அடர்த்தியான காடு! சரியாகப் பனித்திரை மறையவில்லை. கதிரவன் எங்கள் கண்களுக்குத் தெரியாமல் இருந்தான். அந்தப் பாவிகள் சுட ஆரம்பித்துவிட்டார்கள். எங்களுக்குண்டான மறைவிடத்தைப் பிடித்துத் தயாராகிவிட்டோம். அவர்கள் சுட்டவண்ணம் இருந்தனர். நாங்களும் ஆரம்பித்தோம்! எனைமறந்து குண்டுகள் பொழிந்தன! கைகள் ஓயுமட்டும் துப்பாக்கியை நீட்டிக்கொண்டே இருந்தேன். எங்கோ இலைமறை காய்போல வீரர்களைச் சுமந்துகொண்டு முதலுதவிக்குச் சென்றுகொண்டிருக்கும் வீரர்களைப் பார்த்தேன். அங்கு நிறையச் சேதம். மதியம்போல் நிறுத்தினர். எழுந்து செல்வோம் என எழுந்தேன். மீண்டும் வெடிக்க ஆரம்பித்தனர்! மீண்டும் குழிக்குள் அமர்ந்தேன்! உணவுப் பொட்டலத்தை எடுத்து உண்டேன். உஷாரானேன். கண்களுக்குத் தெரிந்த அளவில் ஓடிவந்தவர்கள் ஆறுபேரைத் தீர்த்தேன். மீண்டும் வெடித்தேன். குண்டுகள் காலி, அருகில் இருந்த நண்பனை உஷார் செய்தேன்! சுடுவது நின்றதுபோலத் தெரிந்தது. சப்ளைகளை எடுக்க விரைந்தேன். எங்கிருந்தோ வந்த குண்டு என்மேற் பாய்ந்தது. உணர் விழந்தேன்! உயிரும் இழந்தேன்!

*

இப்பொழுது நான் கல்லறையிலிருந்து பேசுகிறேன். என் உயிரை நான் நாட்டுக்கு ஈந்தேன். வஞ்சகக் கூட்டத்தில் சிலரை என்னால் கொல்ல முடிந்தது. அந்த அளவில் நான் திருப்தி அடைகிறேன்! என்னையும் கல்லறையிலிருக்கும் என் சோதரர்களையும் கண்டு கண்ணீர் வடித்துச் செல்கிருர்கள் நாட்டு மக்கள். அவர்களுக்கு எனது வணக்கங்கள். என் தம்பி நேற்றுத்தான் வந்தான் இங்கு. மூன்று சொட்டு விழிநீர் என்மேல் இட்டான்! வாழ்க அவன்! எல்லை மீட்கும் நாளை எதிர்நோக்கி இங்கு காத்திருக்கிறேன்!

பாதுகாப்பு நிதி

அன்பளிப்பு

"திராவிட நாடு" அலுவலகத் தோழர்கள், தங்களின் (7) ஏழு நாள் ஊதியமான ரூபா 130-00 2—12—62-ல் சென்னையில் நடைபெற்ற நிதியளிப்பு நிகழ்ச்சியின் போது அன்பளிப்பாக வழங்கினர்.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
... சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.